# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு செ.ம.வேலுசாமி
வணக்கத்திற்குரிய மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

பெறுநர்

நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 205/ 2012 / எம்சி. 8 நாள் : 26.01.2012**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நாள் மாற்றியமைக்கப்பட்டது – தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் 27.01.2012 ம் தேதி நடைபெற இருந்த மாமன்ற சாதாரணக் கூட்டம் தவிர்க்க இயலாத நிர்வாக காரணங்களினால் 30.01.2012 திங்கள்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(ஒப்பம்) செ.ம.வேலுசாமி)
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

/உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு செ.ம.வேலுசாமி
வணக்கத்திற்குரிய மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

பெறுநர்

நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 205/ 2011 / எம்சி. 8 நாள் : 18.01.2012**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் 25.01.2012 புதன்கிழமை காலை 10.15 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) செ.ம.வேலுசாமி
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மை நகல் /

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம் - ஜனவரி 2012

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| பொருளடக்கம் | |
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ே)<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | பொறியியல் பிரிவு - திருவண்ணாமலை நகராட்சி – கார்த்திகை தீபத்திருவிழா - 20 நவீன நடமாடும் கழிவறைகள் அனுப்பப்பட்டது – தொகை கோரப்பட்டது – மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 2 | பணியமைப்பு - எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது - புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல் - அரசுக்கு பிரேரணை அனுப்புதல் - மாமன்றத்தின் அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 3 | பணியமைப்பு - சென்னை உயர்நீதிமன்ற வழக்குகள் - கூடுதல் வழக்கறிஞர்கள் நியமனம் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் தொடர்பாக. |
| 4 | மாமன்ற பிரிவு - திரு.என்.சின்னதுரை துணைமேயர் - பதவி ராஜினாமா செய்தது – ஏற்றுக்கொள்ளப்பட்டது – பதிவு செய்தல் தொடர்பாக. |
| 5 | பொது சுகாதார பிரிவு - மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள நகர்நல மையங்கள், மருந்தகங்கள், பொது சுகாதார ஆய்வுக் கூடம் - ஆகிய பணிகளை அரசு சுகாதாரத்துறைக்கு மாற்றம் செய்தல் - மாமன்ற கருத்து பெற்று நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கு அனுப்பி வைத்தல் தொடர்பாக. |
| 6 | வருவாய் பிரிவு - மேற்கு மண்டலம் - குத்தகை மற்றும் வாடகை இனங்களுக்கு சேவை வரி வசூலித்து மத்திய கலால் துறைக்கு செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | Jnnurm – பில்லூர் 2ம் குடிநீர் திட்டம் - முதல் சிப்பப் பணி - தலைமை நீரேற்று நிலையத்தில் 6 எண்ணிக்கையிலான நீர் இறைக்கும் மோட்டார் மற்றும் பம்புசெட் பொருத்துதல் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 8 | Jnnurm – பில்லூர் குடிநீர் திட்டம் பகுதி 1 - இராமகிருஷ்ணாபுரம் பிரதான மேல்நிலைத் தொட்டியிலிருந்து கிழக்கு மண்டல பகுதிகளுக்கு இரும்பு குழாய் பதித்தல் பணி - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 9 | நகரமைப்புப் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 41 – தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் அமைக்கப்பட்ட காந்தி மாநகர் மனைப்பிரிவு - காலை எண் 26, 39 உள்ளிட்டவை - இடத்தை காவல்துறை மற்றும் மாநகராட்சிக்கு ஒப்படைக்கக் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 10 | நகரமைப்புப் பிரிவு - Jnnurm - நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணி - சிங்காநல்லூர் கிராமம் - நிலத்திற்கான இழப்பீட்டுத் தொகை வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 11 | பொறியியல் பிரிவு - பீளமேடு பயனீர் மில் சாலை – சுகாதாரப் பணியாளர்களுக்கு புதியதாக அடுக்குமாடி குடியிருப்பு கட்டுதல் - திருத்திய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 12 | கோயம்புத்தூர் மாநகராட்சி – சூன்யா வேஸ்ட் மேனேஜ்மென்ட் – திட்டத்தின் கீழ் வரும் 30.01.2012 முதல் 02.02.2012 வரை – நேபாள நாட்டில் நடைபெறும் துவக்க கூட்டம்; – வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான பொறியாளர்கள் பங்குபெறுதல்– அரசின் அனுமதி கோருதல; – மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் தொடர்பாக. |

| | |
|---|---|
| 13 | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டம் – (TURIP) 2011 – 2012ல் சிப்பம் I ன் கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் தொடர்பாக. |
| 14 | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டம் – (TURIP)2011 – 2012ல் சிப்பம் II ன்கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் தொடர்பாக. |
| 15 | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டம் – (TURIP)2011 – 2012ல் சிப்பம் III ன்கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் தொடர்பாக. |
| 16 | கோயம்புத்தூர் மாநகராட்சி – நகர்ப்புற சாலை அபிவிருத்தி திட்டம் – (TURIP)2011 – 2012ல் சிப்பம் IV ன்கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் தொடர்பாக. |
| 17 | Jnnurm – 24×7 குடிநீர் விநியோகத் திட்டம் செயல்படுத்துதல் - வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் கர்நாடக மாநில மாநகராட்சிகளுக்கு நேரில் சென்று ஆய்வு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் தொடர்பாக. |
| 18 | நகரமைப்புப் பிரிவு - துடியலூர், வெள்ளக்கிணர், சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி, காளப்பட்டி பேரூராட்சிகள் மற்றும் விளாங்குறிச்சி கிராம ஊராட்சிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டுதல் - முன்நுழைவு அனுமதிக்கு நகராட்சி நிர்வாக அனுமதி பெறுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |

**நன்றியுரை**

அ) திருக்குறள்

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

(குறள் 975)

விளக்கம்

செயற்கரிய செயல்களை முறையாகச் செய்யும் ஆற்றல் உடையவர்களே பெருமைக்கு உரியவர்கள்.

திருவள்ளுவர்

---

ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்புத் தீர்மானம் எண் 1**

**"மண்ணுக்குள் இருக்கும் வேரையும் - இந்த**

**கண்ணுக்கு அடையாளம் காட்டும் தாய்.**

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் அம்மா அவர்கள் மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைநீர், முல்லை ஆறு மற்றும் பெரியாறு என்ற ஆறுகளாக கேரள மாநிலத்தில் ஓடி வீணாக கடலில் கலப்பதை தவிர்க்க உருவாக்கப்பட்ட முல்லை பெரியாறு அணை மூலம் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு தேவையான குடிநீர் தேவையும், பாசன தேவையும் நிறைவடைகிறது.

இதற்கு காரணமான கர்னல் பென்னி குவிக் என்ற ஆங்கிலேய பொறியாளர் 3 ஆண்டுகளில் அணை பாதி கட்டப்பட்டு, கடும் வெள்ளத்தினால் வேலைகள் பாதிக்கப்பட்ட நேரத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் நிதி தராத நிலையில், தன் சொந்த நாட்டிற்கு சென்று தனது சொந்த சொத்துக்களை விற்று மீண்டும் இந்தியா வந்து தன் சொந்த செலவில் அணையை கட்டி முடித்த பென்னி குவிக் அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் அணையின் லோயர் கேம்ப்-ல் 2500 ச.அடி பரப்பளவில் 1 கோடி ரூபாய் செலவில் அவரது திருவுருவ சிலையுடன் கூடிய மணிமண்டபம் கட்டப்படும் என்றும், திறப்பு விழாவிற்கு பென்னி குவிக்-ன் பேரன் அழைக்கப்படுவார் என்றும் அறிவித்துள்ள, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு கோவை மாநகராட்சியின் சார்பில் - மாமன்றத்தின் மூலம் நமது நெஞ்சம் நிறைந்த நன்றி மலர்களை காணிக்கை ஆக்குகிறோம்."

என்ற தீர்மானத்தை 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். மணிமேகலை எம்.ஏ,. அவர்கள் முன்மொழிந்தார். 48 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு ஆர். பிரபாகரன் அவர்கள் வழிமொழிந்தார்.

**<u>சிறப்புத் தீர்மானம் என் 01 நாள் : 30.01.2012</u>**

தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

---

**சிறப்புத் தீர்மானம் எண் 2**

"கடந்த 24.01.2012ஆம் நாள் மதியம் 02.00 மணியளவில், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், கோவை மக்களின் குடிநீர் பஞ்சத்தை போக்கிட கிழக்கு பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கிட தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் பில்லூர் குடிநீர் திட்டத்தை துவக்கி வைத்து உடனடியாக 30 MLD தண்ணீர் கிடைத்திட தலைமை செயலகத்திலிருந்து வீடியோ கான்பரன்ஸ் மூலம் துவக்கி வைத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாநகராட்சியின் அனைத்து உறுப்பினர்கள் சார்பிலும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். "

என்ற தீர்மானத்தை 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். மணிமேகலை எம்.ஏ,. அவர்கள் முன்மொழிந்தார். 48 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு ஆர். பிரபாகரன் அவர்கள் வழிமொழிந்தார்.

**<u>சிறப்புத் தீர்மானம் என் 02 நாள் : 30.01.2012</u>**

<u>தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.</u>

**சிறப்புத் தீர்மானம் எண் 3**

"அண்மையில் தமிழகத்தை பெருமளவு தாக்கி சேதப்படுத்தியுள்ள ''தானே'' புயல் நிவாரண நிதிக்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களிடம் நமது வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் மாநகராட்சியின் ஒரு நாள் ஊதியத்தையும், தனது சொந்த நிதியாக ரூ.5 இலட்சத்தையும் தந்துள்ளார்கள்.

அதன்படி, நாமும் அ.இ.அண்ணா தி.மு.கழக மாமன்ற உறுப்பினர்கள் 78 பேர், சுயேட்சை உறுப்பினர்கள் 2 பேரின் ஒருநாள் மாநகராட்சி கூட்டத்தில் கலந்து கொள்ள தரப்படும் தலா ரூ.800/-ஐ புயல் நிவாரணத்திற்கு வழங்குகிறேன் என தெரிவித்துக் கொள்கிறேன். "

என்ற தீர்மானத்தை 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி எஸ். மணிமேகலை எம்.ஏ,. அவர்கள் முன்மொழிந்தார். 48 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு ஆர். பிரபாகரன் அவர்கள் வழிமொழிந்தார்.

**சிறப்புத் தீர்மானம் என் 03 நாள் : 30.01.2012**

தீர்மானப் பொருளை ஏற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 1**

பொருள்:– கோவை மாநகராட்சி திருவண்ணாமலை நகராட்சி கார்த்திகை தீபத்திருவிழா 2011–12 முன்னிட்டு தற்காலிக கழிப்பிடங்களை அமைப்பது – தொடர்பாக.

பார்வை:– 1. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் நே.மு.க. கடித நாள் பிசி சிறப்பு எண் 25/2011 நாள் : 02.10.2011.
2. அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை அவர்களின் கடித நாள் 2760/எம்ஏ4/2011/–1 நாள் : 08.11.2011

கோவை மாநகராட்சி திருவண்ணாமலை நகராட்சி கார்த்திகை தீபத்திருவிழா 2011–12 முன்னிட்டு தற்காலிக கழிப்பிடங்களை அமைப்பதற்க்கு 20 எண்ணிக்கையில் நவீன நடமாடும் கழிவறைகளை கொடுத்து பொது மக்களின் விழாவை சிறப்பிக்க மேற்படி பார்வை 1 மற்றும் 2 லிருந்து கடிதங்கள் பெறப்பட்டது.

பார்வை 2ல் கண்டுள்ள அரசு செயலர் அவர்கள் கடிதத்தில் 20 நடமாடும் கழிவறைகளை ஒரு முறை மாற்றுதல் (one time transfer) அடிப்படையில் மற்றும் தற்போதைய மதிப்பீட்டில் வழங்கும்படியும் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இதன் காரணமாக 20 எண்ணிக்கையில் கீழ்கண்ட நவீன நடமாடும் கழிவறைகளை திருவண்ணாமலை நகராட்சிக்கு 16.11.2011 அன்று அனுப்பப்பட்டது.

| வ. எண் | வகை | வாங்கப்பட்ட விலை ஒன்றிற்க்கு | எண்ணிக்கை | விலை மொத்தம் | தேய்மானம் 10 % | தற்போதைய விலை |
|---|---|---|---|---|---|---|
| 1 | வகை 2 | 6,36,600.00 | 4 | 25,46,400.00 | 2,54,640.00 | 22,91,760.00 |
| 2 | வகை 3 | 6,35,600.00 | 6 | 38,13,600.00 | 3,81,360.00 | 34,32,240.00 |
| 3 | வகை 4 | 5,48,800.00 | 5 | 27,44,000.00 | 2,74,400.00 | 24,69,600.00 |
| 4 | வகை 5 | 3,21,600.00 | 5 | 16,08,000.00 | 1,60,800.00 | 14,47,200.00 |
| | | | 20 | 1,07,12,000.00 | 10,71,200.00 | 96,40,800.00 |

இதன் மொத்த விலையாக ரூ.1,07,12,000/– தேய்மானம் 10% நீங்கலாக ரூ.**96,40,800.00** நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இத்தொகையினை, The Commissioner, City Municipal Corporation, Coimbatore, என்ற பெயருக்கு வரைவோலையாகவோ அல்லது காசோலையாகவோ அனுப்பிவைக்கும்படி திருவண்ணாமலை நகராட்சியை கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவர பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :- அனுமதிக்கலாம் ந.க.எண். 7521/10/எம்.டி.– 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 214 நாள் : 30.01.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் 2**

**பொருள்:** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது – புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல் – அரசுக்கு பிரேரணை அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டுவது –தொடர்பாக.

--------

இம்மாநகராட்சி தற்போது அரசாணை (நிலை) எண்.140, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.15.09.2011ன் படி ஐந்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டு 100 வார்டுகளுடன் செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே தற்போது ஐந்தாவது மண்டலமாக செயல்பட உள்ள மத்திய மண்டலத்திற்கு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும். தற்போது கீழ்க்கண்டவாறு பணியாளர்கள் நான்கு மண்டலங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

| வ.எண் | பதவியின் பெயர் | தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | தற்போது பணிபுரிபவர்களின் எண்ணிக்கை | காலிபணியிடம் |
|---|---|---|---|---|
| **வகு□□I அலுவலர்கள்** | | | | |
| 1 | ஆணையாளர் | 1 | 1 | 0 |
| 2 | துணை ஆணையாளர் | 1 | 1 | 0 |
| 3 | உதவி ஆணையாளர் (வார்டு) | 4 | 2 | 2 |
| 4 | உதவி ஆணையாளர் (வருவாய்) | 1 | 1 | 0 |
| 5 | உதவி ஆணையாளர் (நிர்வாகம்) | 1 | 0 | 1 |
| 6 | உதவி ஆணையாளர் (கணக்குகள்) | 1 | 1 | 0 |
| 7 | மாநகர பொறியாளர் | 1 | 1 | 0 |
| 8 | செயற் பொறியாளர் | 2 | 2 | 0 |
| 9 | செயற் பொறியாளர்(திட்டம்) | 1 | 1 | 0 |
| 10 | நகர் நல அலுவலர் | 1 | 1 | 0 |
| | **மொத்தம்** | **14** | **11** | **3** |
| வகுப்பு **II அலுவலர்கள்** | | | | |
| 1 | கணக்கு அலுவலர் | 3 | 3 | 0 |
| 2 | மாமன்ற செயலாளர் | 1 | 1 | 0 |
| 3 | சட்ட அலுவலர் | 1 | 0 | 1 |
| 4 | மக்கள் தொடர்பு அலுவலர் | 1 | 1 | 0 |
| 5 | நிர்வாக அலுவலர் | 4 | 4 | 0 |
| 6 | உதவி செயற் பொறியாளர் | 5 | 5 | 0 |
| 7 | உதவி பொறியர்/இளம் பொறியர் | 36 | 30 | 6 |
| 8 | உதவி நகர் நல அலுவலர் | 1 | 1 | 0 |
| 9 | பெண் மருத்துவ அலுவலர் (நகர் நல மையம்) | 20 | 20 | 0 |
| 10 | மருத்துவ அலுவலர் (மருந்தகம் ) (அலோபதி) | 13 | 8 | 5 |
| 11 | மருத்துவ அலுவலர் (மருந்தகம் ) ( சித்தா) | 2 | 2 | 0 |
| 12 | மருத்துவ அலுவலர் (மருந்தகம்) (ஆயுர்வேதிக்) | 3 | 3 | 0 |
| 13 | மருத்துவ அலுவலர் (பொது சுகாதார ஆய்வு கூடம்) | 1 | 1 | 0 |
| | **மொத்தம்** | **91** | **79** | **12** |
| வகுப்பு **III அலுவலர்கள்** | | | | |
| 1 | கண்காணிப்பாளர் | 7 | 7 | 0 |
| 2 | உதவி வருவாய் அலுவலர் | 4 | 4 | 0 |
| 3 | நிருபர் | 1 | 0 | 1 |
| 4 | உதவியாளர் /கணக்கர் (27+9) | 36 | 31 | 5 |
| 5 | நேர்முக உதவியாளர் | 2 | 0 | 2 |
| 6 | சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 2 | 0 | 2 |
| 7 | இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் | 105 | 97 | 8 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | துப்புரவு பணி ஆய்வாளர் | 72 | 0 | 72 |
| 9 | வரிவசூலர் | 72 | 51 | 21 |
| 10 | ஓட்டுநர் | 34 | 24 | 10 |
| 11 | பதிவுரு எழுத்தர் | 15 | 15 | 0 |
| 12 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 64 | 53 | 11 |
| 13 | தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் | 2 | 2 | 0 |
| 14 | பொது சுகாதார செவிலியர் / பகுதி சுகாதார செவிலியர். | 20 | 18 | 2 |
| 15 | சுகாதார ஆய்வாளர் | 24 | 19 | 5 |
| 16 | நகர சுகாதார செவிலியர் | 158 | 108 | 50 |
| 17 | மருந்தாளுநர் | 20 | 17 | 3 |
| 18 | ஆய்வு கூட தொழில் நுட்பாளர் | 1 | 0 | 1 |
| 19 | தொழில் நுட்ப உதவியாளர் | 4 | 3 | 1 |
| 20 | தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை I | 5 | 1 | 4 |
| 21 | தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை II | 18 | 17 | 1 |
| | **மொத்தம்** | **666** | **468** | **198** |
| **வகுப்பு IV அலுவலர்கள்** | | | | |
| 1 | அலுவலக உதவியாளர் | 18 | 18 | 0 |
| 2 | தேர்ச்சி திறனற்ற பணியாளர் | 703 | 339 | 364 |
| 3 | பெண் செவிலிய உதவியாளர்/ஆண் செவிலிய உதவியாளர். | 33 | 12 | 21 |
| 4 | வகுப்பு IV பெண் பணியாளர் (மருந்தகம்) | 20 | 11 | 9 |
| 5 | களப்பணியாளர் | 11 | 2 | 9 |
| 6 | மருந்தக துப்புரவாளர் | 15 | 9 | 6 |
| 7 | துப்புரவு பணியாளர் | 2916 | 2769 | 147 |
| | **மொத்தம்** | **3716** | **3160** | **556** |

மேலும் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 11 நகராட்சி, பேரூராட்சி, மற்றும் ஊராட்சிகளில் கீழ்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| **வ.எண்** | **பதவியின் பெயர்** | **தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை** | **தற்போது பணிபுரிபவர்களின் எண்ணிக்கை** | **காலிபணியிடம்** |
|---|---|---|---|---|
| **வகுப்பு III அலுவலர்கள்** | | | | |
| 1 | செயல் அலுவலர் | 10 | 4 | 6 |
| 2 | உதவியாளர் | 5 | 3 | 2 |
| 3 | இளநிலை உதவியாளர் | 25 | 17 | 8 |
| 4 | வரிவசூலர் | 26 | 24 | 2 |
| 5 | கணினி விவர பதிவாளர் | 2 | 1 | 1 |
| 6 | ஓட்டுநர் | 11 | 6 | 5 |
| 7 | பதிவுரு எழுத்தர் | 4 | 3 | 1 |
| 8 | சுகாதார ஆய்வாளர் | 3 | 3 | 0 |
| 9 | நகராட்சி பொறியாளர் | 1 | 1 | 0 |
| 10 | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 10 | 10 | 0 |
| 11 | பணி மேற்பார்வையாளர் (over sear) | 4 | 3 | 1 |
| 12 | பணி ஆய்வாளர் | 1 | 1 | 0 |
| 13 | குழாய் ஆய்வாளர் (Tap Inspector) | 9 | 0 | 9 |

| வகுப்பு IV அலுவலர்கள் | | | | |
|---|---|---|---|---|
| 14 | அலுவலக உதவியாளர் | 7 | 3 | 4 |
| 15 | பொருத்துனர்(Fitter) | 1 | 0 | 1 |
| 16 | காவலர் | 2 | 1 | 1 |
| 17 | மின் கம்பியாளர் | 2 | 0 | 2 |
| 18 | உதவியாளர்(Helper) | 3 | 3 | 0 |
| 19 | குழாய் திருப்புனர் (OHT) –நீர் உந்து இயக்கநர் | 19 | 18 | 1 |
| 20 | துப்புரவு பணியாளர் | 327 | 316 | 11 |
| | **மொத்தம்** | **471** | **417** | **54** |

இம்மாநகராட்சி மத்திய மண்டலத்திற்கு ஏற்கனவே உத்திரவிடப்பட்ட அரசாணை எண்.237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.27.09.1996ன் படி, மாநகராட்சியில் உள்ள நான்கு மண்டலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களின் அடிப்படையில் பணியாளர்களை பணியமர்த்தப்பட வேண்டியுள்ளது. எனவே கீழ்க்கண்டவாறு பணியிடங்களை தோற்றுவிக்கப்பட வேண்டியுள்ளது.

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| **பொதுப் பணி** | | | | | | | |
| **வகுப்பு I** | | | | | | | |
| 1 | ஆணையாளர் 15600-39100+7600 | 1 | - | - | 1 | - | – |
| 2 | துணை ஆணையாளர் 15600-39100+7600 | 1 | - | - | 1 | - | – |
| 3 | உதவி ஆணையாளர் (வார்டு) 15600-39100+5700 | 4 | - | 1 | 5 | 1 | மண்டலத்திற்கு ஒருவர் வீதம் |
| 4 | உதவி ஆணையாளர் (வருவாய்) 15600-39100+5700 | 1 | - | - | 1 | - | – |
| 5 | உதவி ஆணையாளர் (நிர்வாகம்) 15600-39100+5700 | 1 | - | - | 1 | - | – |
| 6 | உதவி ஆணையாளர் (கணக்குகள்) 15600-39100+5700 | 1 | - | - | 1 | - | – |
| **மொத்தம்** | | **9** | - | **1** | **10** | **1** | |
| **வகுப்பு II** | | | | | | | |
| **1** | கணக்கு அலுவலர் 9300-34800+4600 | **3** | **-** | **5** | **8** | **5** | **மைய அலுவலகம் –3**<br>பொதுக் கணக்குபிரிவு –**1**, குடிநீர் விநியோக பிரிவு –**1** , சேமநல நிதிகணக்கு–**1**<br>மண்டலத்திற்கு ஒருவர் வீதம் –**5** |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| **2** | மாமன்ற செயலாளர் 9300-34800+4600 | **1** | **-** | **-** | **1** | **-** | – |
| **3** | சட்ட அலுவலர் 9300-34800+4600 | **1** | **-** | **-** | **1** | **-** | – |
| **4** | மக்கள் தொடர்பு அலுவலர் 9300-34800+4500 | **1** | **-** | **-** | **1** | **-** | – |
| **5** | நிர்வாக அலுவலர் 9300-34800+4600 | **4** | **-** | **1** | **5** | **1** | ஒரு மண்டல அலுவலகத்திற்கு ஒருவர் வீதம் **–5** |
| | **மொத்தம்** | **10** | **-** | **6** | **16** | **6** | |
| | | | **வகுப்பு III** | | | | |
| 1 | கண்காணிப்பாளர் **9300–34800+4800** | 7 | 10 | 1 | 18 | 1 | **<u>மைய அலுவலகம் – 8</u>**<br>பொதுப்பிரிவு**–1,**<br>பொதுக் கணக்குபிரிவு **–1,**<br>குடிநீர் விநியோக பிரிவு **–1,**<br>நகர்நல பிரிவு **–1,**<br>பொறியியல் பிரிவு **–2,**<br>நகரமைப்பு பிரிவு **–2,**<br>**<u>மண்டல அலுவலகத்திற்கு 2 பேர் வீதம்</u>**<br>பொது நிர்வாகம் , நகர் நலம் மற்றும் பொறியியல் பிரிவு**–1**<br>வருவாய் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு **–1** |
| 2. | உதவி வருவாய் அலுவலர் 9300-34800+4800 | 4 | - | 1 | 5 | 1 | ஒரு மண்டல அலுவலகத்திற்கு ஒருவர் வீதம் **–5** |
| 3. | நிருபர் 9300-34800+4800 | 1 | - | - | 1 | - | – |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 4. | உதவியாளர் /கணக்கர் 5200-20200+2800 | 36 | 5 | 16 | 57 | 16 | **<u>மைய அலுவலகம்</u> –22**<br>பொதுப்பிரிவு–5,<br>பொதுக்கணக்குபிரிவு –5,<br>நகரமைப்பு பிரிவு –2,<br>பொறியியல் பிரிவு–3,<br>நகர்நல பிரிவு – 5, நிலம் மற்றும் எஸ்டேட் (நகரமைப்பு பிரிவு)–2<br>**மண்டல அலுவலகத்திற்கு 7 பேர் வீதம்**<br>கணக்கு பிரிவு –1, வழக்கு –1, வருவாய்–2, பொறியியல் பிரிவு –1, நிர்வாகம் –1, பொது சுகாதாரம்–1 |
| 5. | நேர்முக உதவியாளர் 5200-20200+2800 | 2 | - | 1 | 3 | 1 | மேயர் – 1, ஆணையாளர் –1,<br>துணை ஆணையாளர் –1. |
| 6. | சுருக்கெழுத்து தட்டச்சர் 5200-20200+2800 | 2 | - | 1 | 3 | 1 | மேயர் – 1, ஆணையாளர் –1,<br>துணை ஆணையாளர் –1. |
| 7. | இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் 5200-20200+2400 | 105 | 27 | 52 | 184 | 52 | **<u>மைய அலுவலகம்</u> –34**<br>பொதுபிரிவு –4,<br>பொதுக் கணக்கு பிரிவு–4,<br>குடிநீர் விநியோகம்–4,<br>நகரமைப்பு பிரிவு–4,<br>பொறியியல் பிரிவு –4,<br>நகர் நல பிரிவு –4,<br>நிலம் மற்றும் எஸ்டேட்(நகரமைப்பு)–4<br>மக்கள் தொடர்பு அலுவலர்–1, வருவாய் பிரிவு–2, மாமன்ற பிரிவு–2, சட்டப் பிரிவு–1 |
| | | | | | | | **ஒவ்வொரு மண்டல அலுவகங்களுக்கும் –30 வீதம் ஐந்து மண்டலங்களுக்கு**<br>வருவாய் பிரிவு–20, கருவூலம் –2, சம்பளப்பட்டியல்–2, சுகாதார பிரிவு –2, உதவிசெயற்பொறியாளர்–1, உதவி செயற்பொறியாளர் (திட்டம்) – 1, பொது நிர்வாகம் –2 |
| 8. | வரிவசூலர் 5200-20200+2400 | 72 | 26 | 2 | 100 | 2 | வார்டு ஒன்றிற்கு ஒருவர் வீதம். |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 9. | ஒட்டுநர்<br>5200-20200+2400 | 34 | 11 | 194 | 239 | 194 | கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள 239 வாகனங்களுக்கு ஒட்டுநர்கள் தேவைப்படுகிறது. |
| 10. | பதிவுரு எழுத்தர்<br>4800-10000+1400 | 15 | 4 | 6 | 25 | 6 | **<u>மைய அலுவலகம்</u> – 10**<br>பதிவறை –2,<br>பொதுப் பிரிவு –2,<br>பொதுக் கணக்கு பிரிவு –1,<br>குடிநீர் விநியோக ம் –1,<br>நகரமைப்பு பிரிவு –1,<br>பொறியியல் பிரிவு– 1<br>நிலம் மற்றும் எஸ்டேட் –1,<br>நகர் நலபிரிவு –1<br>**மண்டலத்திற்கு 3 பேர் வீதம் ஐந்து மண்டலங்களுக்கு**<br>தபால் மற்றும் அனுப்புகை பிரிவு –1,<br>பதிவறை–1,கருவூலம் –1. |
| | **கூடிமாத்தம்** | **278** | **83** | **274** | **635** | **274** | |
| | | | வகுப்பு –IV | | | | |
| 1. | அலுவலக உதவியாளர்<br>4800-10000+1300 | 18 | 6 | 6 | 30 | 6 | **மைய அலுவலகம் –15**<br>**மண்டல அலுவலகத்திற்கு 3 பேர் வீதம் ஐந்து மண்டலங்களுக்கு** |
| | **மொத்தம்** | **18** | **6** | **6** | **30** | **6** | |
| | | | **பொதுப் பணி தோற்றுவிக்கப்பட வேண்டிய புதிய பணியிடங்கள்** | | | | |
| | | | வகுப்பு –III | | | | |
| 1. | பண்டக காப்பாளர்<br>5200-20200+2400 | - | - | 1 | 1 | 1 | மைய அலுவலகம் –1<br>பொது பண்டக சாலை –1 |
| 2. | காசாளர்<br>5200-20200+2400 | - | - | 6 | 6 | 6 | மைய அலுவலகம் –1<br>மண்டல அலுவலகங்களுக்கு 1 வீதம் – 5 |
| 3. | தொலை பேசி இயக்குநர்<br>4800-10000+1400 | - | - | 1 | 1 | 1 | மைய அலுவலகம் –1<br>தொலை பேசி அறை –1 |
| | **மொத்தம்** | **-** | **–** | **8** | **8** | **8** | |
| | | | வகுப்பு – IV | | | | |
| 1. | காவலர்<br>4800-10000+1300 | - | - | 85 | 85 | 85 | **மைய அலுவலகம் –6**<br>**32 நகர் நல மையங்களுக்கு 2 வீதம்–64**<br>மண்டல அலுவலகங்களுக்கு 3 வீதம் ஐந்து மண்டலங்களுக்கு –15 |
| | **மொத்தம்** | **-** | **-** | **85** | **85** | **85** | |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| **பொது சுகாதார பணி** | | | | | | | |
| **வகுப்பு – I** | | | | | | | |
| 1 | நகர் நல அலுவலர் 15600-39100+7600 | 1 | - | - | 1 | - | – |
| | **மொத்தம்** | **1** | | | **1** | **-** | |
| **வகுப்பு –II** | | | | | | | |
| 1. | உதவி நகர் நல அலுவலர் 15600-39100+5700 | 1 | - | - | 1 | - | – |
| 2. | மருத்துவஅலுவலர் (அலோபதி) 15600-39100+5400 | 13 | - | 7 | 20 | 7 | ஏற்கனவே உள்ள 11 அலோபதி மருந்தகங்களில் 2 மருந்தகங்களில் கூடுதலாக 2 மருத்துவ பணியிடங்கள் இருந்தன ஆக 11 மருந்தகங்களின் எண்ணிக்கை 11+2=13 எல்லை விரிவாக்கத்திற்குப் பின் 9 மருந்தகங்கள் தேவைப்படுகிறது (ஆக மொத்தம் 11+9 = 20 மருந்தகங்கள்) தேவைப்படும் மருத்துவ அலுலவர்கள் 20 ஏற்கனவே உள்ள மருத்துவ அலுலவர்கள் 13 போக 7 மருத்துவ அலுவலர்கள் தேவைப்படுகின்றனர். |
| 3. | மருத்துவ அலுவலர் (சித்தா) 15600-39100+5400 | 2 | - | 1 | 3 | 1 | முதலில் 4 மண்டலங்கள் என்றிருந்தமையால் 2 மண்டலத்திற்கு ஒரு சித்தா மருந்தகம் என்ற ரீதியில் ஏற்கனவே உள்ள 2 சித்தா மருந்தகங்களுடன் கூடுதலாக 1 சித்தா மருந்தகங்கள் அவற்றிக்காக 1 சித்தா மருத்துவ அலுவலர்கள் தேவைப்படுகின்றனர். |
| 4. | மருத்துவ அலுவலர் (ஆயுர்வேதிக்) 15600-39100+5400 | 3 | - | 1 | 4 | 1 | மண்டலத்திற்கு ஒரு ஆயுர்வேத மருந்தகம் என்ற ரீதியில் ஏற்கனவே உள்ள 3 ஆயுர்வேத மருந்தகங்களுடன் கூடுதலாக 2 ஆயுர்வேத மருந்தகம் தேவைப்படுவதுடன் அதற்கென 2 ஆயுர்வேத மருத்துவ அலுவலர் தேவைப்படுகிறார். |
| 5. | மருத்துவ அலுவலர் (பொது சுகாதார ஆய்வு கூடம்)15600+39100+5400 | 1 | - | - | 1 | - | – |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 6. | பெண் மருத்துவ அலுவலர் (நகர் நல மையம்) 15600-39100+5400 | 20 | - | 12 | 32 | 12 | ஏற்கனவே உள்ள 20 நகர்நல மையங்களுடன் விரிவாகக்கப்பட்ட பகுதிகளுக்கு 10 நகர் நல மையங்களும் பழைய மாநகராட்சிப் பகுதிக்குக் கூடுதலாக 2 நகர்நல மையங்களும் தேவைப்படுகின்றன. எனவே புதிதாக உருவாக்கப்பட உள்ள 12 நகர்நல மையங்களுக்கு 12 பெண் மருத்துவ அலுவர்கள் தேவைப்படுகின்றனர். |
| | **மொத்தம்** | **40** | **-** | **21** | **61** | **21** | |
| | | | | **வகுப்பு – III** | | | |
| 1. | துப்புரவு பணி மேற்பார்வையாளர் 4800-10000+1400 | 64 | 10 | 26 | 100 | 26 | ஒரு வார்டுக்கு ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர் வீதம் 100 நபர்கள் தேவைப்படுகின்றனர். ஏற்கனவே 74 நபர்கள் உள்ளதால், மேலும் 26 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் தேவைப்படுகின்றனர். |
| 2. | பொது சுகாதார செவிலியர்/பகுதி சுகாதார செவிலியர் 9300-34800+4400 | 20 | - | 12 | 32 | 12 | புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பின்னர் 32 நகர் நல மையத்திற்கும் ஒருவர் வீதம் செயல்பட 32 நபர்கள் (தாய்சேய் நல அலுவர் / பொது சுகாதார செவிலியர்/ பகுதி சுகாதர செவிலியர்) தேவைப்படுகின்றனர். ஏற்கனவே 20 நபர்கள் உள்ளமையால் கூடுதலாக 12 நபர்கள் தேவையாக உள்ளனர். |
| 3. | சுகாதார ஆய்வாளர் 9300-34800+4200 | 24 | 3 | 23 | 50 | 23 | இரண்டு வார்டுகளுக்கு ஒரு சுகாதார ஆய்வாளர் என்ற ரீதியில் 50 நபர்கள் தேவை. ஏற்கனவே 27 நபர்கள் உள்ளதால் மேலும் 23 நபர்கள் தேவை |
| 4. | நகர சுகாதார செவிலியர் 5200-20200+2000 | 158 | **-** | 102 | 260 | 102 | ஒரு நகர் நல மையத்திற்கு 8 நகர சுகாதார செவிலியர்கள் வீதம் 32 நகர்நல மையங்களுக்கு 260 நபர்கள் தேவை ஏற்கனவே 158 நபர்கள் உள்ளதால் கூடுதலாக 102 நபர்கள் தேவை |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிட’கள் | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 5. | மருந்தாளுநர் 5200-20200+2800 | 20 | - | 10 | 30 | 10 | ஒரு மருந்தகத்திக்கு ஒரு மருந்தாளுநர் வீதம் 28 மருந்தகங்களுக்கு 28 நபர்கள் தேவை. பொது சுகாதார துறை பண்டகக் காப்பாளர் மைய அலுவலகத்திற்கு 2 நபர்கள் தேவை ஏற்கனவே 20 நபர்கள் உள்ளதால் கூடதலாக 10 மருந்தாளுநர்கள் தேவை. |
| 6. | தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் 5200-20200+2800 | 2 | - | - | 2 | - | – |
| 7. | ஆய்வு கூட தொழில் நுட்பாளர். 9300-34800+4300 | 0 | - | 1 | 1 | 1 | பொது சுகாதார ஆய்வு கூடம் –1 |
| | **மொத்தம்** | **288** | **13** | **174** | **475** | **174** | |
| | | | | **வகுப்பு –IV** | | | |
| 1. | பெண் செவிலிய உதவியாளர் / ஆண் செவிலிய உதவியாளர் 4800-10000+1300 | 33 | - | 7 | 40 | 7 | ஒவ்வொரு மருந்தகத்திற்கும் ஆண்/பெண் செவிலிய உதவியாளர்களாக இரவர் தேவை 20 அலோபதி மருந்தகங்களில் 33 பேர்கள் உள்ளதால், கூடுதாக 7 நபர்கள் தேவை. |
| 2. | களப்பணியாளர் 4800-10000+1300 | 11 | - | 14 | 25 | 14 | நான்கு வார்டுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 25 நபர்கள் தேவை. ஏற்கனவே 11 பணியிடங்கள் உள்ளதால் கூடதலாக 14 பணியிடங்கள் தேவை. |
| 3. | வகுப்பு –IV பெண் பணியாளர் 4800-10000+1300 | 20 | - | 44 | 64 | 44 | ஒரு நகர் நல மையத்திற்கு இரவர் வீதம் 64 பணியிடங்கள் தேவை, ஏற்கனவே 20 பணியிடங்கள் உள்ளமையால் கூடதலாக 44 பணியிடங்கள் தேவை. |
| 4. | மருந்தக துப்புரவாளர் 4800-10000+1300 | 15 | - | 15 | 30 | 15 | ஒவ்வொரு நகர் நல மையத்திற்கும் ஒருவர் வீதம் 30 பணியிடங்கள் தேவை. ஏற்கனவே 15 பணியிடங்கள் உள்ளமையால் கூடதலாக 15 பணியிடங்கள் தேவை. |
| 5. | துப்புரவு பணியாளர் 4800-10000+1300 | 2916 | 327 | 957 | 4200 | 957 | அரசு ஆணை எண்.224 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்11.09.07ன் படி அளவுகோல்படி தேவைப்படும் பணியிடங்கள் 4200 தற்போது 3243 பணியிடங்கள் உள்ளதால் கூடதலாக 957 பணியிடங்கள் தேவை. |
| | **கூமாத்தம்.** | **2995** | **327** | **1037** | **4359** | **1037** | |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிட''கள் | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| **பொது சுகாதார பணி** தோற்றுவிக்கப்பட வேண்டிய புதிய பணியிடங்கள் | | | | | | | |
| வகுப்பு – II | | | | | | | |
| 1 | சுற்றுச்சூால் அலுவலர் 15600-39100+5700 | - | - | 1 | 1 | 1 | கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒரு சுற்றுச் சூால் அலுவலர் பணியிடம் புதிதாக தோற்றுவிக்கலாம். |
| 2 | மிருக காட்சி சாலை மருத்துவ இயக்குநர் 15600-39100+5400 | - | - | 1 | 1 | 1 | மிருகக் காட்சி சாலையைக் கண்காணிக்க கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ஒரு மிருகக்காட்சி சாலை மருத்துவ இயக்குநர் ஒருவரை புதிதாக நியமிக்கலாம். |
| 3 | கால்நடை மருத்துவ அலுவலர் 15600-39100+5400 | - | - | 6 | 6 | 6 | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, பொது கணக்குக் குழு மற்றும் இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 2007–08ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையின்படி ஒரு கால்நடை மருத்துவர் ஒரு நாளில் 96 மிருகங்களுக்கு மேல் பரிசோதிக்கக்கூடாது எனவும், மூன்று இறைச்சிக் கூடங்களிலும் ஒரு நாளில் பெறப்படும் 1160 மிருகங்களின் சராசரி எண்ணிக்கையில் 12 கால்நடை மருத்துவர்கள் தேவைப்படுவதால் இம்மாநகராட்சியில் முதற்கட்டமாக 6கால்நடைமருத்துவர் பணி இடங்களை தோற்றுவிக்கலாம். |
| | **கூமாத்தம்** | **-** | | **8** | **8** | **8** | |
| வகுப்பு – III | | | | | | | |
| 1. | மண்டல சுகாதார அலுவலர் 9300-34100+4300 | - | - | 5 | 5 | 5 | மண்டலம் ஒன்றிற்கு ஒரு மண்டல சுகாதர அலுவலர் வீதம் ஐந்து மண்டலங்களுக்கு ஐந்து நபர்கள் தேவைப்படுகிறார்கள். |
| 2. | பண்டக காப்பாளர் 5200-20200+2400 | - | - | 2 | 2 | 2 | நகர்நல மையங்களின் பணிக்கு ஒரு பண்டகக்காப்பாளரும், மாநகராட்சி மருந்தகங்களுக்கு ஒரு பண்டகக் காப்பாளரும் தேவைப்படுகிறார்கள். |
| 3. | மருந்தாளுநர் (ஆயுர்வேதம்) 5200-20200+2800 | - | - | 2 | 2 | 2 | ஒரு ஆயுர்வேத மருந்தகத்திற்கு ஒருவர் வீதம் இரண்டு ஆயுர்வேத மருந்தகத்திற்கு இரண்டு பேர் தேவைப்படுகிறார்கள். |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 4. | மருந்தாளுநர் (சித்தா) 5200-20200+2800 | - | - | 2 | 2 | 2 | ஒரு சித்தா மருந்தகத்திற்கு ஒரு நபர் வீதம் இரண்டு சித்தா மருந்தகத்திற்கு இரண்டு பேர் தேவைப்படுகிறார்கள். |
| 5. | சமுதாய அமைப்பாளர் 5200-20200+2000 | - | - | 27 | 27 | 27 | வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தினர் 2000 நபர்களுக்கு ஒருவர் வீதம் (2004ம் ஆண்டு சர்வேயின்படி 54621 குடும்பங்கள்) |
| | **மொத்தம்** | **-** | **-** | **38** | **38** | **38** | |
| | | | | **வகுப்பு – IV** | | | |
| 1. | துப்புரவு பணியாளர் கால்நடை 4800-10000+1300 | - | - | 4 | 4 | 4 | மிருகக்காட்சி சாலையில் துப்புரவுப் பணியினை மேற்கொள்ள இரண்டு துப்புரவுப் பணியாளர்களும் சிதம்பரம் பூங்காவில் துப்புரவுப் பணிகளை மேற்கொள்ள இரண்டு துப்புரவு பணியாளர்களும் தேவைப்படுகிறார்கள். |
| 2. | துப்புரவு பணியாளர் (மலேரியா) 4800-10000+1300 | - | - | 200 | 200 | 200 | வார்டு ஒன்றிற்கு 2 நபர்கள் வீதம்100 வார்டுகளுக்கு 200 துப்புரவுப் பணியாளர்கள் (மலேரியா) தேவைப்படுகிறாகள். |
| 3. | மயான உதவியாளர் 4800-10000+1300 | - | - | 50 | 50 | 50 | ஒருமயானத்திற்கு ஒரு மயான உதவியாளர் வீதம் 50 மயானத்திற்கு 50 மயான உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள். |
| | **மொத்தம்** | **-** | **-** | **254** | **254** | **254** | |
| | | | | **பொறியியல் பணி** | | | |
| | | | | **வகுப்பு – I** | | | |
| 1. | மாநகர பொறியாளர் 37400-67000+8700 | 1 | - | - | 1 | - | – |
| 2. | செயற் பொறியாளர் 15600-39100-6600 | 2 | - | 5 | 7 | 5 | (தலைமை பொறியாளர் நிலையில்) மண்டலத்திற்கு ஒருவர் வீதம் –5 குடிநீர் விநியோகம் –1,பாதாள சாக்கடை திட்டம், மழைநீர் திட்டம், திடக்கழிவு மேலாண்மை மற்றும் தெருவிளக்குகள் ஆகியவற்றிற்கு –1. |
| 3. | செயற் பொறியாளர் (திட்டம்) 15600-39100-6600 | 1 | - | - | 1 | - | – |
| | **மொத்தம்** | **3** | | **5** | **9** | **5** | |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | **வகுப்பு – II** | | | | |
| 1. | உதவி செயற் பொறியாளர் (திட்டம்) 15600-39100+5600 | 4 | - | 1 | 5 | 1 | ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒருவர் வீதம். |
| 2. | உதவி செயற் பொறியாளர் 15600-39100+5600 | 5 | - | 7 | 12 | 7 | ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒருவர் வீதம் –5 பாதாள சாக்கடை திட்டம் –1, பாதாள சாக்கடை பராமரித்தல் –1, குடிநீர் விநியோக தலைமைப்பணிகள் –3, மின்பொறியாளர் (தெருவிளக்குகள்) –1 ,திடக்கழிவு மேலாண்மை–1 |
| 3. | உதவி பொறியர் / இளநிலை பொறியர் **9300–34800+4600** | 36 | 2 | 41 | 79 | 41 | இரண்டு வார்டுகளுக்கு ஒருவர் வீதம் –50, உதவி பொறியர்/இளம் பொறியர் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒருவர் –5குடிநீர் விநியோகம் –6, மழைநீர் வடிகால் திட்டத்திற்கு–5, தெரு விளக்கு–5, பாதாள சாக்கடை திட்டம் –3. திடக்கழிவு மேலாண்மை–5 |
| | **மொத்தம்** | **45** | **2** | **49** | **96** | **49** | |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | **வகுப்பு – III** | | | | |
| 1. | துப்புரவுபணி ஆய்வாளர் 5200-20200+2400 | 72 | - | 28 | 100 | 28 | ஒரு வார்டிற்கு ஒருவர் வீதம். |
| 2. | தொழில் நுட்ப உதவியாளர் 5200-20200+2800 | 4 | 4 | 71 | 79 | 71 | இரு வார்டிற்கு ஒருவர் வீதம் –50, வகுப்பு I அலுவலர்களுக்கு –8 பூங்கா பராமரிப்பு–3, உதவி செயற் பொறியாளர் அலுவலகம் –12, உதவிப் பொறியாளர் குடிநீர்விநியோகம்– 6 |
| 3. | தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை I 5200-20200+2600 | 5 | - | 179 | 184 | 179 | பொருத்துனர்களாக பணிபுரிவர்கள் (தலைமை பணிகள்) – 67, பணிகளுக்காக ஒவ்வொரு வார்டுக்கும் ஒருவர் வீதம் – 100, மின் பணியாளர்வேலையில் (தலைமை பணிகள்) (STP,WTP) மண்டல அலுவலகங்களுக்கு–11 பாதாள சாக்கடை திட்டப்பணி ஆய்வாளர்–6 |
| 4. | தேர்ச்சி திறன் உதவியாளர் நிலை II 5200-20200+1900 | 18 | 9 | 210 | 237 | 210 | மின் கம்பியாளர் –50 , பணிகள் மற்றும் குழாய் பொறுத்துனர் இரு வார்டிற்கு ஒருவர் வீதம் – 50, நகரமைப்பு பிரிவிற்கு சங்கிலி பணியாளர்கள் மண்டலத்திற்கு 4 நபர்கள் வீதம்–20 குடிநீர் விநியோகம் (STP)–5, 2000 குடிநீர் இணைப்புகளுக்கு ஒரு நீர்மானிகணக்கீட்டாளர் வீதம் –112 |
| | **மொத்தம்** | **99** | **13** | **488** | **600** | **488** | |

| வ.எண். | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| **வகுப்பு – IV** | | | | | | | |
| 1. | தேர்ச்சி திறனற்ற பணியாளர் 4800-10000+1300 | 703 | 25 | 917 | 1645 | 917 | ஆழ்குழாய் கிணறு இயக்குவதற்கு– 300, (4 ஆழ்குழாய் கிணறுகளுக்கு ஒரு நபர் வீதம் 1200 ஆழ்குழாய் கிணறுகளுக்கு) நீர்தேக்கத் தொட்டி இயக்குநர் – 450 (நீர் தேக்க தொட்ட இயக்குநர் முறை மாற்ற அடிப்படையில் ஒரு முறை மாற்றத்திற்கு 3 நபர்கள் வீதம் 3 முறை மாற்றங்களில் பணிபுரிய ) நீர் தேக்க தொட்டி காவலர் –150, நீர் தேக்க தொட்டி மற்றும் குழாய் பராமரிப்பவர்கள் – 150, குடிநீர் இணைப்பு துண்டிப்பு, மறு இணைப்பு வழங்குதல் மற்றும் மதகு திறத்தல் போன்ற பணிகளுக்கு – 343, அலுவலக பணிக்கும் காவலர் மற்றும் பராமரிப்பு பணிக்கு – 100, பாதாளசாக்கடை சுத்தம் செய்யபவர்–48, பேருந்து நிலையம் –10, மார்க்கெட் பணிகளுக்கு –24, பூங்கா பராமரிப்பு – 50, திருமண மண்டபங்கள் பராமரிப்பு – 20 |
| | **மொத்தம்** | **703** | **25** | **917** | **1645** | **917** | |
| **பொறியியல் பணி** தோற்றுவிக்கப்பட வேண்டிய புதிய பணியிடங்கள் | | | | | | | |
| **வகுப்பு–I** | | | | | | | |
| 1. | கண்காணிப்பு பொறியாளர் 37400-67000+8700 | - | - | 2 | 2 | 2 | குடிநீர் விநியோகம் –1, பாதாள சாக்கடை திட்டம் மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை , தெருவிளக்குகள் – 1 |
| | **மொத்தம்** | **-** | **-** | **2** | **2** | **2** | |

| வ. எண் | பதவியின் பெயர் | மாநகராட்சியில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை | எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதால் தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | மொத்தம் (3+4) = 5 | கூடுதலாக தேவைப்படும் பணியிடங்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| **வகுப்பு – III** | | | | | | | |
| 1. | பணி மேற்பார்வையாளர் (Over Seer) 9300-34800+4200 | - | - | 3 | 3 | 3 | – |
| 2. | பூங்கா மேற்பார்வையாளர் 9300-34800+4200 | - | - | 3 | 3 | 3 | அனைத்து மண்டலங்களுக்கும் சேர்த்து – 3 |
| | **மொத்தம்** | **-** | **-** | **6** | **6** | **6** | |
| **தோற்றுவிக்கப்பட வேண்டிய தகவல் தொழில் நுட்ப பணிகள்** | | | | | | | |
| 1 | முறை பகுப்பாய்நர் ( System Analyst) 15600-39100+5400 | - | - | 1 | 1 | 1 | |
| 2 | திட்ட அலுவலர் 9300-34800+4600 | - | - | 1 | 1 | 1 | |
| 3 | உதவி திட்ட அலுவலர் 9300-34800+4400 | - | - | 2 | 2 | 2 | |
| 4 | கணினி விவர பதிவாளர் 5200-20200+2000 | - | - | 55 | 55 | 55 | மைய அலுவலகம் –10, மண்டல அலுவலகத்திற்கு ஐந்து நபர்கள் வீதம் ஐந்து மண்டலத்திற்கு –25, பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் கணிணியில் பதிவு செய்வதற்கு 20 நபர்கள் |
| | **மொத்தம்** | **-** | **-** | **59** | **59** | **59** | |
| **தோற்றுவிக்கப்பட வேண்டிய நகரமைப்பு பிரிவு பணியிடங்கள்** | | | | | | | |
| 1. | உதவி ஆணையாளர் (நிலம் மற்றும் எஸ்டேட்) 15600-39100+5700 | - | - | 1 | 1 | 1 | |
| 2. | வட்டாட்சியர் 15600-39100+5400 | - | - | 1 | 1 | 1 | |
| 3. | துணை வட்டாட்சியர் 9300-34800+4800 | - | - | 1 | 1 | 1 | |
| 4. | நில அளவை ஆய்வாளர் 9300-34800+4600 | - | - | 1 | 1 | 1 | |
| 5. | நில அளவையர் 9300-34800+4300 | - | - | 5 | 5 | 5 | |
| | **மொத்தம்** | **-** | **-** | **9** | **9** | **9** | |

கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வூதியம் ஆண்டுக்கு ரூ. 93.45/– கோடி வழங்கப்பட்டு வருகிறது. இது மாநகராட்சியின் மொத்த வருவாயில் 37.59% சதவீதம் என துணை இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை அவர்களின் கடிதம் தொ.க.எண்.1/2011/அ1, நாள்.08.09.2011ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது இம்மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 11 உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களுக்கான ஊணியம் ஆண்டுக்கு ரூ.7.50/– கோடி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இம்மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ரூ7.00/– கோடி வழங்கப்படுகிறது. இம்மாநகராட்சியில் காலியாக உள்ள அனைத்து பிரிவு பணியிடங்களுக்கும் சேர்த்து ரூ.5.01/– கோடி ஊணியம் வழங்கப்பட வேண்டியுள்ளது. இது மாநகராட்சியின் (இணைக்கப்பட்டுள்ள 11 உள்ளாட்சி அமைப்புகளையும் சேர்த்து) மொத்த வருவாயில் ரூ.34.12% சதவீதம் ஆகும்.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் அனைத்து பிரிவுகளிலும் குறிப்பாக பொறியியல் பிரிவு, சுகாதார பிரிவு, அமைச்சு பணியிடங்கள் ஆகியவற்றில் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளது. கூடதலாக பணியாளர்களை நியமித்தால் நிர்வாகத்தை மேலும் செம்மையாக நடத்தலாம். மேற்கண்ட 3443 பணியிடங்களை தோற்றுவிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு பதவிக்கும் சம்பள விகிதம் கணக்கிடப்பட்டதில் ஆண்டுக்கு கூடதலாக ரூ.47.86/– கோடி செலவு ஏற்படும். மேலும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட 11 உள்ளாட்சி அமைப்புகளின் 2011–12 ஆம் ஆண்டு மொத்த வருவாய் ரூ.82.55 கோடியும் சேர்த்து மாநகராட்சியின் மொத்த கூடதல் வருவாய் ரூ.331.11 கோடி ஆகும். புதிதாக தோற்றுவிக்கப்படும் 3443 பணியிடங்களுக்கு வழங்கப்படும் ஊணியத்தினையும் சேர்த்து ஆண்டுக்கு மொத்த செலவினம் ரூ.160.81 கோடி ஆகும். இது மாநகராட்சி மொத்த வருவாயில் 48.56% சதவீதம் ஆகும்.

ஏனவே,

1. மேற்கண்ட பட்டியலில் குறிப்பிட்டுள்ள 3443 பணியிடங்களை புதிதாக தோற்றுவிக்கவும்
2. இணைக்கப்பட்ட 11 உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள 471 பணியிடங்களை அதே ஊணிய விகிதத்தில் மாநகராட்சி பணியிடத்தில் சேர்க்கவும்
3. அரசாணை 237, நகராட்சி நிர்வாகம் மறும் குடிநீர் வழங்கல் துறை நாள்.27.09.1996ல் மிகுதி பணியிடங்களாக நீக்கம் செய்யப்பட்ட 17 பணியிடங்களை மீண்டும் மாநகராட்சியில் தொடர்ந்து வைத்துக் கொள்ள ஆணை வழங்க கோரியும்

மாமன்றத்தின் பரிந்துரை பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசுக்கு அனுப்பி வைக்க மன்றத்தாள் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம். (ந.க.எண்.5734/2011/எம்.சி2)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 215 நாள் : 30.01.2012</u>**

1. மன்றத்தாள் பக்கம் எண் 4 (நிகழ்ச்சி நிரல் பக்கம் எண்6)-ல் வரிசை எண் 5ல் நிர்வாக அலுவலர் பணியிடம் 1 என்பதை 2 என்றும்,
2. மன்றத்தாள் பக்கம் எண் 4 (நிகழ்ச்சி நிரல் பக்கம் எண் 6)ல் வரிசை எண் 2ல் உதவி வருவாய் அலுவலர் பணியிடம் 1 என்பதை 2 என்றும்,
3. மன்றத்தாள் பக்கம் எண் 7 (நிகழ்ச்சி நிரல் பக்கம் எண் 11)ல் வரிசை எண் 6ல் தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பணியிடம் - 2 என்பதை 10 என்றும்,
4. மன்றத்தாள் பக்கம் எண் 12 (நிகழ்ச்சி நிரல் பக்கம் எண் 18)ல் இரண்டாவது பத்தியில் 4 வது வரிசையில் 3443 என்பதை 3449 எனவும், 8 வது வரிசையில் 3443 என்பதை 3449 எனவும் திருத்தம் மேற்கொண்டதை அனுமதித்தும், அலுவலகக்குறிப்பை அனுமதித்தும் தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

**பொருள்:** பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்குகள் - மாநகராட்சி சார்பில் வாதாட ஏற்கனவே உள்ள மூன்று மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுடன் அரசு மூத்த வழக்கறிஞர் அவர்களின் பரிந்துரைப்படி கூடுதலாக ஒரு மாநகராட்சி வழக்கறிஞர் - நியமனம் செய்தல் தொடர்பாக.

*********

கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளில் மாநகராட்சி சார்பாக வாதாட கோவை மாநகர மாமன்ற தீர்மானங்களின்படி, திரு.ஆர்.சிவக்குமார், திரு.உ.கருணாகரன் மற்றும் திரு.ஜே.சத்தியநாராயணபிரசாத் ஆகிய வழக்கறிஞர்கள் மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களாக நியமனம் செய்யப்பட்டு மாநகராட்சி சார்பாக வாதாடி வருகின்றனர்.

சென்னை உயர்நீதி மன்றத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி எதிராக தொடரப்படும் வழக்குகளில் நகராட்சி நிர்வாக ஆணையர், அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் தேர்தல் ஆணையர், சென்னை உள்ளிட்ட பிற அரசு துறைகளை பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ள வழக்குகளில் அரசு சார்பாக அரசு வழக்கறிஞர்களும் மாநகாட்சி சார்பாக மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களும் வாதாடி வந்தனர். தற்போது திரு.நவநீதகிருஷ்ணன், அரசு மூத்த வழக்கறிஞர் அவர்கள், மாநகராட்சி நிலை வழக்கறிஞராக திருமதி.அன்னலட்சுமி வழக்கறிஞர் அவர்களை நியமனம் செய்யுமாறு பரிந்துரை செய்துள்ளார்.

ஆகவே, அரசு மூத்த வழக்கறிஞர் அவர்களின் பரிந்துரைப்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி சம்பந்தப்பட்ட சென்னை உயர்நீதி மன்ற வழக்குகளில், ஏற்கனவே மாநகராட்சி வழக்குகளை கவனித்து வரும் திரு. ஆர். சிவக்குமார், திரு.உ.கருணாகரன் மற்றும் திரு.ஜே.சத்தியநாராயணபிரசாத் ஆகிய மாநகராட்சி நிலை வழக்கறிஞர்களுடன் திருமதி.அன்னலட்சுமி, வழக்கறிஞர் அவர்களை மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமனம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

தற்போது திரு.ஆர்.சிவக்குமார், மாநகராட்சி வழக்கறிஞருக்கு மாதம் ரூ.7000ஸ்ரீ- வீதமும், திரு.உ.கருணாகரன் மற்றும் திரு.ஜே.சத்தியநாராயண பிரசாத் மாநகராட்சி வழக்கறிஞர்களுக்கு தலா ரூ.5000ரூ- வீதமும் தொடர் கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் திருமதி.அன்னலட்சுமி, வழக்கறிஞர் அவர்களை மாநகராட்சி நிலை வழக்கறிஞராக நியமிக்கும் பட்சத்தில் அவருக்கும் மாதம் ரூ.5000ரூ- வீதம் தொடர் கட்டணம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 10439/2009/எம்.சி.10

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 216 நாள் : 30.01.2012</u>**

பொருள் ஒத்திவைத்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள் – கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு என். சின்னதுரை. துணை மேயர் – பதவியை ராஜினாமா செய்தது – ஏற்றுக்கொள்ளப்பட்டது – பதிவு செய்தல் - தொடர்பாக

பார்வை – 1) தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் ஆணையாளரின் செயல்முறைகள் ந.க.எண் 9602/2011/எம்.சி. 8 நாள் 29.10.2011
2) திரு. என். சின்னதுரை, துணை மேயர் அவர்களின் ராஜினாமா கடிதம் நாள் 30.12.2011
3) கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 37

————————

தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் பார்வை 1–ல் காணும் 29.10.2011ம் தேதிய செயல்முறை உத்திரவின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சியின் 76 வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு என். சின்னதுரை அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சியின் துணை மேயராக தேர்வு செய்யப்பட்டு பதவி வகித்து வந்தார்.

பார்வை 2ல் காணும் கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சியின் துணை மேயர் திரு. என். சின்னதுரை அவர்கள், தனது குடும்பத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு பணிகளின் காரணமாக கோயம்புத்தூர் மாநகராட்சி துணை மேயர் பதவியிலிருந்து ராஜினாமா செய்ய விரும்புவதாக தெரிவித்து வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் 30.12.2011 அன்று விலகல் கடிதம் அளித்துள்ளார்.

பார்வை 3ல் காணும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 பிரிவு 37ன்படி, மாமன்ற உறுப்பினர், வார்டு குழு உறுப்பினர், வார்டு குழு தலைவர், நிலைக்குழு உறுப்பினர் மற்றும் நிலைக்குழு தலைவர், தங்களது பதவியை ராஜினாமா செய்ய விரும்பினால் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களிடம் விலகல் கடிதம் வழங்கிய நாளிலிருந்து ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால், கோயம்புத்தூர் மாநகராட்சியின் துணை மேயர் திரு.என். சின்னதுரை அவர்களின் விலகல் கடிதம் 31.12.2011 அன்று ஏற்கப்பட்டுள்ளது.

இப்பொருள் மாமன்றத்தின் தகவலுக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மாமன்றம் பதிவு செய்யலாம் ந.க.எண் 9602/2011/ எம்.சி. 8

**மாநகர மன்ற தீர்மானம் எண் 217 நாள் : 30.01.2012**

அலுவலகக்குறிப்பு பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 5

பொருள் : நகர் நல பணிகள் - மாநகராட்சி பொறுப்பிலிருந்து அரசு சுகாதாரத் துறைக்கு மாற்றம் செய்தல் - தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் 20 நகர் நல மையங்கள், 16 மருந்தகங்கள், 1 பொது சுகாதார ஆய்வுக்கூடம் ஆகிய பணிகள் அரசு சுகாதாரத் துறைக்கு மாற்றம் செய்ய ஒப்புதல் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் ந.க.எண். 53197 / 2011 / எச்.3, நாள் 05.12.2011ல் கேட்டுள்ளபடி சுகாதார துறைக்கு மாற்றம் செய்வது குறித்து மாமன்றத்தின் கருத்து வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மாமன்றக் கருத்து பெற்று நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 11185/2011/எம்.இ.1.

**மாநகர மன்ற தீர்மானம் எண் 218 நாள் : 30.01.2012**

அலுவலகக்குறிப்பை ஏற்று தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

மத்திய கலால் மற்றும் சுங்கவரி உதவி ஆணையரின் கடித எண் C.No.V/RIP/15/53/2010 STC .ADJ.SCN.SL.No. 49/2010 ADC நாள் 21.10.10-ல் மேற்கு மண்டலத்தில் உள்ள வணிக வளாக கட்டிடத்தில் குத்தகை மற்றும் வாடகை பெறும் இனங்களுக்கு 2007-08 முதல் 2009-10-ம் ஆண்டு முடிய சேவைக் கட்டணம் (Service tax) செலுத்த கோரி நோட்டீஸ் பெறப்பட்டுள்ளது.

மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வருடாந்திர குத்தகை இனங்கள் -12ம், மாத வாடகை அடிப்படையில் உள்ள வணிக மைய கடைகள் 551-ம் உள்ளது. மேற்படி கடைகள் பொது ஏலத்தில் விடும்போது மத்திய கலால் சேவைக்கட்டணம் விதிக்கப்படும் என்று குறிப்பிடப்படாததால் இதுநாள்வரை சேவை வரி தொகை வசூலிக்கப்படவில்லை.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கட்டிடங்களுக்கான வாடகை மற்றும் குத்தகை விடப்படும் இனங்களுக்கு சேவை வரி செலுத்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து தக்க தெளிவு வழங்ககோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்படுகிறது.

மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள வாடகை இனங்களுக்கு மட்டும் 2007-08 முதல் 2011-12-ம் ஆண்டுமுடிய சேவைக் கட்டணமாக சுமாா் ரூ.53.80 லட்சம் வசூலித்து செலுத்தப்பட வேண்டியுள்ளது.

ஏற்கனவே 2007-08-ம் ஆண்டு முதல் பொது ஏல ஒப்பந்தத்தின்படி வாடகை தொகை வசூலிக்கப்பட்டுவிட்டதால் தற்பொழுது வாடகைதாரா்களிடமிருந்து முந்தைய காலத்திற்க்கான சேவை வரி வசூலிப்பது காலதாமதம் ஏற்படும்.

எனவே, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட

(1) குத்தகை மற்றும் வாடகை இனங்களுக்கு தற்பொழுதுள்ள 10.3 சதவீதம் சேவை வரியாக ஜனவரி -2012-ம் மாதம் முதல் வசூல் செய்து மத்திய கலால் துறைக்கு வசூல் செய்த சேவை வரி தொகையினை செலுத்தவும்,

(2) 2007-08-ம் ஆண்டு முதல் 2009-10-ம் முடிய செலுத்த வேண்டிய சேவை வரியினை சம்மந்தப்பட்ட குத்தகைதாரா் மற்றும் வாடகைதாரரிடமிருந்து வசூல் செய்து செலுத்துவது தொடா்பாக நகராட்சி நிா்வாக ஆணையரிடமிருந்து தெளிவுரை பெற்ற பின்னா் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மத்திய கலால் துறைக்கு தெரிவிக்கவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண்.9108/2010/அ1 (மே)

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 219 நாள் : 30.01.2012</u>**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூா் மாநகராட்சி ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பில்லூா் II-வது திட்டத்தில் முதல் சிப்பப் பணியான பில்லூா் அணைப்பகுதியில் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக கட்டப்பட்டுவரும் நீா்சேகரிப்பு கிணறு மற்றும் பம்பிங் அறை உள்ளடங்கிய தலைமை குடிநீா் நீரேற்று நிலையத்தில் **6** எண்ணிக்கையிலான நீா் இறைக்கும் மோட்டாா் மற்றும் பம்பு செட் வாங்கி பொருத்தவும், அதற்கான மின்சார வசதி, டிரான்ஸ்பாா்மா் பொருத்தும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.**4.85** கோடிக்கு நகராட்சி நிா்வாக ஆணையா், சென்னை அவா்களின் நிா்வாக அனுமதி ந.க.எண்: 59269/2010/MCA**3**, நாள் **21.12.2010**–ல் பெறப்பட்டு, கடந்த **22.02.2011**–ல் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

**30.03.2011**–ல் முதல் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட நான்கு (E-Tendering) ஒப்பந்தப்புள்ளிகளில், ஒரு நிறுவனமும் தொழில்நுட்ப தகுதி பெறாததால், மறு ஒப்பந்தப்புள்ளி இரண்டாம் முறையாக கடந்த **28.09.2011**–ல் கோரியதில் கீழ்க்கண்ட நான்கு நிறுவனங்கள் கலந்துகொண்டு (E-Tendering) மூலம் ஒப்பந்தப்புள்ளி வழங்கியது.

1) தி/ள். ஆல்கம் இன்டஸ்ட்ரீஸ், மேட்டுப்பாளையம்
2) தி/ள். ஹைட்ரோ எலக்ட்ரிக்கல் சிஸ்டம்ஸ், சென்னை
3) தி/ள். மேகா இன்ஜினியரிங் & இன்ப்ராஸ்ரக்ஷா்ஸ் லிமிடெட், ஹைதராபாத்.
4) தி/ள். ஜோதி லிமிடெட், சென்னை.

நான்கு நிறுவனங்களின் தொழில்நுட்ப தகுதி (Technical bid) மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வுக் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு, தொழில்நுட்ப தகுதி பெற்றதால் நான்கு நிறுவனங்களின் ஒப்பந்தவிலைப்புள்ளிகள் (Financial Bid) **09.12.2011**–ல் திறக்கப்பட்டு அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த மதிப்பிட்டுத் தொகை | நிறுவனம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத் தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தி/ள். ஆல்கம் இன்டஸ்ட்ரீஸ், மேட்டுப்பாளையம் | ரூ. 4,79,84,178/– | ரூ.5,03,00,100.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 4.83% சதவீதம் அதிகம் |
| 2 | தி/ள். ஹைட்ரோ எலக்ட்ரிக்கல் சிஸ்டம்ஸ், சென்னை | | ரூ.4,74,90,000.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 1.03% சதவீதம் குறைவு |
| 3 | தி/ள். ஜோதி லிமிடெட், சென்னை. | | ரூ.5,26,33,620.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 9.69% சதவீதம் அதிகம் |
| 4 | தி/ள். மேகா இன்ஜினியரிங் & இன்ப்ராஸ்ரக்ஷர்ஸ் லிமிடெட், ஹைதராபாத். | | ரூ.4,65,60,653.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 2.97% சதவீதம் குறைவு |

பெறப்பட்ட நான்கு ஒப்பந்தவிலைப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி மதிப்பீட்டு தொகையை விட 2.97% குறைவாக (ரூ.4,65,60,653.00) இருந்ததால், விலைகுறைப்பு செய்திட கேட்டுக்கொள்ளப்பட்டதில், அந்நிறுவனம் ரூ. 2,00,000/– விலைகுறைப்பு செய்து தனது 19.12.2011–ல் கடிதத்தின் மூலம் தெரிவித்தது. இருப்பினும் இரண்டாம் முறையாக விலைக்குறைப்பு செய்ய 22.12.2011–ல் கோரியதில், மேலும் தங்களால் விலைக்குறைப்பு செய்ய இயலாதென தெரிவித்து 29.12.2011–ல் கடிதம் மூலம் தெரிவித்து உள்ளனர்.

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த மதிப்பிட்டுத் தொகை | நிறுவனம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத் தொகை | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | தி/ள். மேகா இன்ஜினியரிங் & இன்ப்ராஸ்ரக்ஷர்ஸ் லிமிடெட், ஹைதராபாத். | ரூ.4,79,84,178/– | ரூ.4,65,60,653.00<br><br>19.12.2011–ம் தேதிய விலை குறைப்பிற்கு பின்னர் ஒப்பந்தத் தொகை ரூ.4,63,60,653.00 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 2.97% சதவீதம் குறைவு<br><br>ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 3.38% **குறை**□ |

எனவே, இரண்டாம் ஒப்பந்த அழைப்பில் விலை குறைப்பிற்கு பின்னர் மதிப்பீட்டு தொகைக்கும் 3.38% குறைவாக பெறப்பட்டுள்ள மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:– இரண்டாம் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளி வழங்கிய தி/ள் மேகா இன்ஜினியரிங் & இன்ப்ராஸ்ரக்ஷர்ஸ் லிமிடெட், ஹைதராபாத் நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி விலைக்குறைப்பிற்கு பின்னர் ஒப்பந்த மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 3.38% குறைவா (ரூ. 4,63,60,653.00) உள்ளதால் மேற்படி ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 9190 / 02 / ஜே.என்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 220 நாள் : 30.01.2012</u>**

அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோவை மாநகராட்சி, பில்லூர் குடிநீர்த் திட்டம் பகுதி I ன் கீழ் இராமகிருஷ்ணாபுரத்தில் உள்ள பிரதான மேல்நிலை தொட்டியிலிருந்து கிழக்கு மண்டல பகுதிகளான பீளமேடு, மசக்காளிபாளையம், சௌரிபாளையம், வரதராஜபுரம், நீலிக்கோணாம்பாளையம், சிங்காநல்லூர், ஒண்டிப்புதூர், SIHS காலனி மற்றும் நேதாஜிபுரம் பகுதிகள் அடங்கிய வார்டு எண்கள் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 பகுதி, 11 பகுதி மற்றும் வார்டு எண் 16 பகுதிகளில் குடிநீர் வழங்க பதிக்கப்பட்டுள்ள 400 மி.மீ மற்றும் 500 மி.மீ விட்டமுள்ள ஏ.சி. குழாய்கள் அடிக்கடி உடைப்பு ஏற்படுவதால், அதற்கு பதிலாக முதற்கட்டமாக 5.70 கி.மீ. நீளத்திற்கு மட்டும், 1100 மி.மீ. மற்றும் 700 மி.மீ விட்டமுள்ள இரும்பு குழாய் (MS Pipe) பதிக்கவும் அதற்கான நிதியாக இயக்கம் மற்றும் பராமரிப்பு பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் மானிய நிதி மற்றும் மாநகராட்சி பங்கு நிதியுடன் சேர்த்து ரூ. 8.50 கோடி செலவில் பெற்று இப்பணியினை மேற்கொள்ள மாமன்ற தீர்மானம் எண். 164 நாள். 14.12.2010–ன் படி நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்(டி): 72, நாள்: 15.02.2011–ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

கடந்த 30.03.2011–ல் முதன் முறையாக E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில், வரப்பட்ட ஒரு ஒப்பந்தவிலைப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 10.99% கூடுதலாக இருந்ததால் மறு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்ற தீர்மான எண் : 43, நாள்: 10.08.2011-ல் ஒப்புதல் வழங்கியதின் பேரில், இரண்டாம் முறையாக 28.09.2011–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட மூன்று நிறுவனங்கள் கலந்துகொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியது.

1) திரு. ஆஸ்டர் –BMS (JV), செகந்திராபாத்
2) திரு. மேகா இன்ஜினியரிங் & இன்ப்ராஸ்ரக்ஷர்ஸ் லிமிடெட், ஹைதராபாத்.
3) திரு. ரத்தினமணி மெட்டல்ஸ் – தர்பான் இன்ப்ராஸ்ரக்சர் லிட். (JV), மும்பை.

மேற்படி நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப தகுதி மாநில அளவிலான தொழில்நுட்ப கூராய்வுக் குழுவின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதில் இரு நிறுவனங்களான, திரு. ஆஸ்டர் – BMS (JV), செகந்திராபாத் மற்றும் திரு. மேகா இன்ஜினியரிங் & இன்ப்ராஸ்ரக்ஷர்ஸ் லிமிடெட், ஹைதராபாத் மட்டும் தொழில்நுட்ப தகுதி பெற்றதால் 09.12.2011–ல் ஒப்பந்தவிலைப்புள்ளிகள் (Financial Bid) திறக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண் | ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த மதிப்பிட்டுத் தொகை | நிறுவனம் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தொகை | ஒப்பந்தவிலைப் புள்ளி விபரம் மற்றும் விலைக் குறைப்பு விபரம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. ஆஸ்டர் – BMS (JV), செகந்திராபாத் | ரூ. 8,39,83,908.16 | ரூ. 8,18,16,733.30 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 2.58% சதவீதம் குறைவு. |
| 2 | திரு. மேகா இன்ஜினியரிங் & இன்ப்ராஸ்ரக்ஷர்ஸ் லிமிடெட், ஹைதராபாத். | | ரூ.11,03,96,960.67 | ஒப்பந்த மதிப்பீட்டு தொகைக்கு 31.45% சதவீதம் அதிகம். |

மேற்படி இரண்டு ஒப்பந்தவிலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளி மதிப்பீட்டு தொகையை விட 2.58% குறைவாக (ரூ.8,18,16,733.30) இருந்ததால், விலைகுறைப்பு கோரி கடந்த 10.12.2011 மற்றும் 22.12.2011–ல் கேட்டுக்கொள்ளப்பட்டதில், அந்நிறுவனம் மேலும் விலைகுறைப்பு செய்ய இயலாதென தனது 16.12.2011–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது. எனவே, இரண்டாம் ஒப்பந்த அழைப்பில் மதிப்பீட்டு தொகைக்கும் 2.58% குறைவாக பெறப்பட்டுள்ள மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

இரண்டாம் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் குறைந்த ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கிய தி/ள். ஆஸ்டர் – BMS (JV), செகந்திராபாத் நிறுவனத்தின் விலைப்புள்ளி ஒப்பந்த மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 2.58% குறைவாக (ஒப்பந்த மதிப்பு ரூ.8,18,16,733.30) உள்ளதால் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தவிலைப்புள்ளியினை ஏற்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 7504/09/ஜே.என். 4

**மாநகர மன்ற தீர்மானம் எண் 221 நாள் : 30.01.2012**

அலுவலகக்குறிப்பை ஏற்று, ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம், வார்டு எண். 41, உட்பட்ட பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அமைக்கப்பட்ட காந்தி மா நகர் பேஸ் - I, II மற்றும் III எனும் சைட் அண்டு சர்வீஸ் ஸ்கீம் மனைப்பிரிவு காலை எண். 26 முதல் 39 வரை மற்றும் 48, 49, 50, 52, 53, 54, 55 / 2பி, மற்றும் 40 / 2, 43 / 2, 45, 46, 47, கணபதி கிராமத்தில் அமைந்துள்ளது இம்மனைப்பிரிவில் EWS A', B', LIG I, II, III, மற்றும் MIG, HIG எனும் அளவில் 2066 வீட்டு மனைகள் பிரிக்கப்பட்டு சாலைகள் போடப்பட்டுள்ளது. பாதாள சாக்கடை குழாய், குடிநீர் போன்ற அடிப்படை வசதிகளுடன் மேற்படி பகுதி முழுவதும் வீடுகள் கட்டப்பட்டு பொதுமக்கள் நிறைந்த பகுதியாக வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மேலே கண்ட மனைப்பிரிவிற்கு ஒப்புதல் பெற்று விற்பனை செய்யப்படும்போது 38371 சதுரடி நிலத்தினை சமுதாயக் கூடத்திற்காகவும் 13575 சதுரடி இடத்தினை காவல் நிலையத்திற்காகவும் ஒதுக்கீடு செய்வதாக தெரிவித்து அங்கு மனை வாங்கி குடியேற உள்ள பொதுமக்களுக்கு இந்த வசதிகள் கிடைக்கும் என விளம்பரப்படுத்தி மனைகள் விற்பனை செய்யப்பட்டு உள்ளது. ஆனால் இன்று வரை அப்பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு இந்த வசதி அளிக்கப்படவில்லை. இதுகுறித்து பொது மக்களிடமிருந்து தொடர்ந்து இந்த வசதிகள் கோரி மாநகராட்சிக்கு கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன.

மேற்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அமைக்கப்பட்ட காந்திமா நகர் எனும் இம்மனைப்பிரிவில் உள்ள காவல் நிலையம் என ஒதுக்கப்பட்ட கட்டிடத்துடன் கூடிய திறவிடப்பரப்பும் (திறவிடப்பரப்பு - 13575 சதுரடி, கட்டிட பரப்பு - 1500 சதுரடி), சமுதாயக்கூடம் (கம்யூனிட்டி சென்டர் ) எனும் மனை இடத்தில் கட்டப்பட்ட கட்டிடம் மற்றும் திறவிட பரப்பும் (திறவிடப்பரப்பு 38371 சதுரடி, கட்டித்தின் பரப்பு 2700 சதுரடி) ஆகிய இந்த இரு இடங்களில் உள்ள கட்டிடங்கள் எவ்வித பராமரிப்பும் இன்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இல்லாமல் இருந்து வருகிறது.

எனவே, ஏற்கனவே அறிவித்தபடி காவல் நிலையத்திற்காக ஒதுக்கப்பட்ட இடம் மற்றும் கட்டிடத்தினை காவல் துறைக்கு ஒப்படைக்குமாறும், சமுதாயக்கூடத்திற்கு கட்டப்பட்டுள்ள கட்டிடம் மற்றும் இடத்தினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காகவும் மாநகராட்சிக்கு ஒப்படைக்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தை கேட்டுக்கொள்ள மாமன்றத்திற்கு பொருள்வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க. எண். 620 / 12 / எம்.எச்5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 222 நாள் : 30.01.2012**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

ஜவஹர்லால் நேரு தேசிய நகர புனரமைப்புத் திட்டத்தில் சிங்காநல்லூர் கிராமத்தில் க.ச எண். 758 /1, 761 /3ஏ, 3பி, 3சி, 762/3ஏ, 3பி, 3சி, 3டி, 762/4, 762/5, 762/2 – ல் 14.4 ஏக்கர் நிலத்தில் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க நிலத்திற்கான இழப்பீட்டு தொகை வழங்க நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.117; நாள். 26.8.2011 ரூ. 15.00 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி உள்ளது. மாவட்ட ஆட்சித்தலைவரால் நிலமதிப்பீட்டு தொகை ரூ. 88,00,000/- (ரூபாய் எணபத்து எட்டு லட்சம்) 1 ஏக்கருக்கு நிர்ணயம் செய்ய மாமன்றம் மாவட்ட ஆட்சி தலைவரை கேட்டு தீர்மானம் எண். 106; நாள். 12.9.2011 –ல் நிறைவேற்றி உள்ளது. அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியதில் அவர் தனது கடிதத்தில் கோயம்புத்தூர் மாவட்டம் (தெற்கு) வட்டம், சிங்காநல்லூர் கிராமம், க.ச. எண். 758/1 உள்ளிட்ட காலைகளில் 14.34 ஏக்கர் நிலத்தினை கோயம்புத்தூர் மாநகராட்சிக்காக ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தனியார் பேச்சுவார்த்தை மூலம் கிரையம் பெறுதல் தொடர்பான நடவடிக்கையில் ஏக்கர் 1-ன் மதிப்பு ரூ. 88 லட்சம் (ரூபாய் எண்பத்தி எட்டு லட்சம் மட்டும்) என நில மதிப்பு மாவட்ட நிலைக்குழு நிர்ணயிக்கப்பட்டவை, நில நிர்வாக ஆணையர் தலைமையிலான மாநில நிலைக்குழு

கூட்டத்தாள் அங்கீகரிக்கப்பட்டு, அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் திருந்திய நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசாணை எண். 117; நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர வழங்கல் (எம்.சி. II) துறை நாள். 26.8.2011 அரசாணை பிறப்பித்துள்ளது.

எனவே, பார்வை 3-ல் காணும் கடிதத்தில் கோரியவாறு நிலமதிப்பினை மறுநிர்ணயம் செய்யும் வினா எழுவதில்லை. மேலும், வழிகாட்டி மதிப்பினை திருத்தம் செய்வது தொடர்பாக அமைக்கப்டட சார்புக்குழு முன்மொழிந்துள்ள வழிகாட்டி மதிப்பினை கணக்கில் கொண்டும், தற்போதைய நிலமதிப்பு முன் நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகமாகவே இருக்க வாய்ப்பு உள்ளது. எனவே, மேற்கண்ட புலங்களுக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நில மதிப்பினை மறு நிர்ணயம் செய்து குறைக்க இயலாது என்ற விபரத்தினை என தெரிவித்துள்ளார். மேற்படி, நில மதிப்பு தொகையை நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதிவேண்டி மன்றப் பொருள் வைக்கப்பகிறது.

**அலுவலகக் குறிப்பு.** சிங்காநல்லூர் கிராமம் புல எண். 758 /1, 761 /3ஏ, 3பி, 3சி, 762/3ஏ, 3பி, 3சி, 3டி, 762/4, 762/5, 762/2 ஆகியவற்றில் உள்ள 14.40 ஏக்கர் பரப்பளவு நிலத்தினை வாங்குவதற்கும் மற்றும் நிலமதிப்பு பதிவு கட்டணம், எதிர்பாராத செலவினம், மற்றும் நிர்வாக செலவினம் சேர்த்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 117; நாள். 26.8.2011 –ல் குறிப்பிட்டு உள்ள செலவுத் தொகை ரூ. 15.00 கோடி மாநகராட்சியில் இருந்து செலவு செய்ய மாமன்றம் ஒப்புதல் வழங்க பொருள் வைக்கப்பட்டதில், மாவட்ட ஆட்சித் தலைவர் நிலமதிப்பீட்டு தொகை குறைவாக நிர்ணயம் செய்ய மாமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியதில் அவர் தனது கடிதத்தில் கோயம்புத்தூர் மாவட்டம் (தெற்கு) வட்டம், சிங்காநல்லூர் கிராமம், க.ச. ஏண. 758/1 உள்ளிட்ட காலைகளில் 14.34 ஏக்கர் நிலத்தினை கோயம்புத்தூர் மாநகராட்சிக்காக ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க தனியார் பேச்சுவார்த்தை மூலம் கிரையம் பெறுதல் தொடர்பான நடவடிக்கையில் ஏக்கர் 1-ன் மதிப்பு ரூ. 88 லட்சம் (ரூபாய் எண்பத்தி எட்டு லட்சம் மட்டும்) என நில மதிப்பு மாவட்ட நிலைக்குழு நிர்ணயிக்கப்பட்டதை, நில நிர்வாக ஆணையர் தலைமையிலான மாநில நிலைக்குழு கூட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டு, அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் திருந்திய நிர்வாக ஒப்புதல் வழங்கி அரசாணை எண். 117; நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர வழங்கல் (எம்.சி. II) துறை நாள். 26.8.2011 அரசாணை பிறப்பித்துள்ளது.

எனவே, பார்வை 3-ல் காணும் கடிதத்தில் கோரியவாறு நிலமதிப்பினை மறுநிர்ணயம் செய்யும் வினா எழுவதில்லை. மேலும், வழிகாட்டி மதிப்பினை திருத்தம் செய்வது தொடர்பாக அமைக்கப்டட சார்புக்குழு முன்மொழிந்துள்ள வழிகாட்டி மதிப்பினை கணக்கில் கொண்டும், தற்போதைய நிலமதிப்பு முன் நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகமாகவே இருக்க வாய்ப்பு உள்ளது. எனவே, மேற்கண்ட புலங்களுக்கு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நில மதிப்பினை மறு நிர்ணயம் செய்து குறைக்க இயலாது என்ற விபரத்தினை தெரிவித்துள்ளார். எனவே ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட நில மதிப்பு 1 ஏக்கருக்கு ரூ. 88 லட்சம் ஏற்றுக்கொண்டு 14.40 ஏக்கர் நிலத்தினை கையப்படுத்த 15 கோடி ரூபாயினை மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

ந.க.எண். 12069/2006/எம்.எச்.5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 223 நாள் : 30.01.2012</u>**

அலுவலகக்குறிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

---

## பொருள் எண் 11

பொருள் கோயம்புத்தூர் மாநகராட்சி - பீளமேடு பயனீர் மில் சாலையில் சுகாதார பணியாளர்களுக்கு பழுதடைந்த குடியிருப்புகளுக்கு பதிலாக புதியதாக அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டுதல் - திருத்திய தொழில்நுட்ப அனுமதி ரூ.330.00 இலட்சத்திற்கு வழங்கப்பட்டது – மாமன்றத்தின் ஒப்புதல் கோருதல் - தொடர்பு.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம், பயனீர் மில் சாலையில் உள்ள பழுதடைந்த சுகாதார குடியிருப்புகளை இடித்து விட்டு புதியதாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு மாமன்றத் தீர்மான எண்.67, நாள் 30-07-2010 ல் அனுமதித்துள்ளதின்பேரில்

மதிப்பீடு ரூ300.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதியினை நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தலைமைப் பொறியாளர் அவர்களால் வழங்கப்பட்டது.

இதன் அடிப்படையில் இப்பணிக்கு 27-12-2010, 31-01-2011, 07-03-2011, 24-06-2011 மற்றும் 09-09-2011 ஆகிய ஐந்து தேதிகளில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை.

இந்நிலையில் 2011-2012-ம் ஆண்டிற்கான விலை விகிதப்படி திருத்திய மதிப்பீடு ரூ310.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த திருத்திய மதிப்பீட்டின்படி ரூ310.00 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ளவும், அதற்காக உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின்கீழ் ரூ 150.00 இலட்சமும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ 160.00 இலட்சமும் சேர்த்து ரூ310.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறவும் மாமன்றம் தனது தீர்மான எண்:72 நாள்:12-09-2011 அனுமதித்துள்ளதை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி (Revised Administrative Sanction and Revised Technical Sanction) வழங்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் தலைமைப் பொறியாளர் அவர்களின் 30-12-2011ம் தேதிய செயல் முறைகளில் 2011-12 ஆம் ஆண்டிற்கான பொதுப் பணித்துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் ஆகியவற்றின் விலை விபரப்படி ரூ330.00 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள திருத்திய தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, ரூ330.00 இலட்சத்தில், அதற்கான உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின்கீழ் ரூ.150.00 இலட்சமும், மாநகராட்சி பொதுநிதியிலிருந்து ரூ180.00 இலட்சத்திலும் பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்:16056/2008/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 224 நாள் : 30.01.2012**

அலுவலகக்குறிப்புக்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

| | |
|---|---|
| **பொருள்:** | கோயம்புத்தூர் மாநகராட்சி – சூன்யா வேஸ்ட் மேனேஜ்மென்ட் (SUNYA – ZERO WASTE MANAGEMENT PROJECT ) திட்டத்தின் கீழ் வரும் **30.01.2012** முதல் **02.02.2012** முடிய நேபாள நாட்டில் நடைபெறும் துவக்க கூட்டத்திற்கு வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான பொறியாளர்கள் பங்குபெறுதல் – அரசின் அனுமதி கோர மன்றத்தின் அனுமதி வேண்டுதல் – தொடர்பாக. |
| **பார்வை :** | **1.** அரசாணை எம்.எஸ். எண்.**147** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி.2) துறை, நாள்.**29.09.2011.**<br>**2.** நிர்வாகசெயலாளர் நேபாள நாட்டின் நகராட்சிகளின் சங்கம் (Municipal Association of Nepal) அவர்களின் கடித எண்.**68/068/069**, நாள்.**09.01.2012.** |

--------

பார்வை 1ல் கண்டுள்ள அரசாணையில் சூன்யா வேஸ்ட் மேனேஜ்மெண்ட் திட்டத்தில் (SUNYA – ZERO WASTE MANAGEMENT PROJECT) கோயம்புத்தூர் மாநகராட்சி பங்கேற்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் கண்ட நேபாள நாட்டின் நகராட்சிகளின் சங்கம் நிர்வாக செயலாளர் அவர்களது கடிதத்தில் மேற்படி திட்டத்தின் துவக்க கூட்டம் வரும் 30.01.2012 முதல் 02.02.2012 முடிய நேபாள நாட்டின் காத்மண்டு நகரில் நடைபெற உள்ளதாகவும் அக்கூட்டத்திற்கு கோயம்புத்தூர் மாநகராட்சியின் வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கூட்டத்திற்கு இம்மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான பணிகளை கவனித்து வரும் பொறியாளர்களும் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ள ஆகும் மொத்த செலவினங்களையும் மேற்கூறிய திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட மானியத்திலிருந்து நேபாள நாட்டின் நகராட்சிகளின் சங்கம் (Municipal Association of Nepal) மூலம் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் இம்மாநகராட்சி சார்பில் கலந்து கொள்ளும் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான பொறியாளர்கள் ஆகியோருக்கு ஆகும் செலவினங்களை இம்மாநகராட்சி ஏற்க வேண்டியதில்லை.

எனவே மேற்கூறிய சூன்யா வேஸ்ட் மேனேஜ்மென்ட் (SUNYA – ZERO WASTE MANAGEMENT PROJECT) திட்ட துவக்க கூட்டத்திற்கு கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில் வணக்கத்திற்குரிய மேயர், ஆணையாளர், திரு.ஆ.லட்சுமணன், செயற்பொறியாளர் (JNNURM) மற்றும் திரு.கே.சரவணக்குமார், உதவி செயற்பொறியாளர் (பிரதான அலுவலகம்) ஆகியோர் கலந்து கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டியும் அரசின் அனுமதி பெற கருத்துரு அனுப்பவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 109/2011/எம்சி6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 225 நாள் : 30.01.2012**
அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## பொருள் எண் 13

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – நகர்ப்புற சாலைஅபிவிருத்தி திட்டம் (TURIP) 2011 – 2012ல் சிப்பம் I ன்கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக.

*******

அரசாணை G.O(Ms) எண் - 290, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (MA-III) நாள் 22.11.2010ல் அரசாணைப்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ.1453.05 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியும், இப்பணிகளை நான்கு சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரநகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடித எண் 23125/2011/E3 நாள் 20.09.2011 அன்று உத்திரவு வழங்கியுள்ளார்.

இதில், முதலாம் சிப்பம் பணிகளுக்கு ரூ.352.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 28.12.2011 அன்று இரு உறைகள் முறையில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பித்தனர். அதன் விபரம் :

(1) திரு. என். தங்கவேலு , கோவை
(2) திரு. ஏ. வெங்கடாசலம் ,கோவை

பெறப்பட்ட இரு ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த தொழில்நுட்ப உறைகள் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவால் 28.12.2011 அன்று பரிசீலனை செய்யப்பட்டதில் திரு.என். தங்கவேலு , கோவை மற்றும் திரு. ஏ. வெங்கடாசலம், கோவை ஆகிய இரு ஒப்பந்தாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதை செய்து ஆணையருக்கு சமர்ப்பிக்கப் பட்டதில் ஆணையர் அவர்கள் 03.01.2012ம் தேதி உத்திரவில் மேற்படி இரு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகளை திறக்க அனுமதி அளித்ததை தொடர்ந்து மேற்படி இரு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் 05.01.2012ம் தேதி அன்று திறக்கப்பட்டதில் திரு. என்.

தங்கவேலு, கோவை ஒப்பந்ததாரர் மதிப்பீட்டிற்கு 15.15% அதிகமும் மற்றும் திரு ஏ. வெங்கடாசலம் கோவை அவர்கள் மதிப்பீட்டிற்கு 20.01% அதிகமும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். இதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் திரு. என். தங்கவேலு அவர்களிடம் கடிதம் மூலம் விலை குறைத்து கேட்கப் பட்டது. அதன் பேரில் ஒப்பந்ததாரர் திரு. என். தங்கவேலு அவர்கள் சில இணங்களுக்கு விலை குறைப்பு செய்ததின் பேரில் மதிப்பீட்டிற்கு 10.00% அதிகம் ஆகும். மேலும் மேற்படி ஒப்பந்ததாரரை மீண்டும் விலை குறைத்துக் கொடுக்க கடிதம் மூலம் கேட்கப்பட்டது. அதன் பேரில் மேலும் விலை குறைத்துக் கொடுத்ததின் பேரில் மதிப்பீட்டிற்கு 4.95 % அதிகம் கொடுத்துள்ளார். எனவே மேற்படி பணிக்கு மதிப்பீட்டிற்கு 4.95 % அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. என். தங்கவேலு அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மேலும் அரசாணையின் எண் G.o.Ms No.227 நாள் 23.11.2009ல் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) தெரிவித்துள்ளவாறு மேற்படி பணிக்கு பயன் படுத்தப்படும் திரவத்தாரின் விலையானது பணி மேற்கொள்ளும் போதுள்ள சந்தை விலைகேற்ப வழங்கவும், அதற்குண்டாகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு இப்பணிக்கு உண்டான பட்டியல் தொகையை வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - அனுமதிக்கலாம். ந.க.எண் : 10777/2011/எம்.டி.3

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 226 நாள் : 30.01.2012</u>**

அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – நகர்ப்புற சாலைஅபிவிருத்தி திட்டம் (TURIP)2011 – 2012ல் சிப்பம் II ன்கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக.

*******

அரசாணை G.O(Ms) எண் - 290, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (MA-III) நாள் 22.11.2010ல் அரசாணைப்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ.1453.05 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியும், இப்பணிகளை நான்கு சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரநகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடித எண் 23125/2011/E3 நாள் 20.09.2011 அன்று உத்திரவு வழங்கியுள்ளார்.

இதில், இரண்டாம் சிப்பம் பணிகளுக்கு ரூ.353.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 28.12.2011 அன்று இரு உறைகள் முறையில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பித்தனர். அதன் விபரம் :

(1) திரு. என். தங்கவேலு , கோவை
(2) திரு. ஏ. வெங்கடாசலம் ,கோவை

பெறப்பட்ட இரு ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த தொழில்நுட்ப உறைகள் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவால் 28.12.2011 அன்று பரிசீலனை செய்யப்பட்டதில் திரு.என். தங்கவேலு , கோவை மற்றும் திரு. ஏ. வெங்கடாசலம், கோவை ஆகிய இரு ஒப்பந்தாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதை செய்து ஆணையருக்கு சமர்ப்பிக்கப் பட்டதில் ஆணையர் அவர்கள் 03.01.2012ம் தேதி உத்திரவில் மேற்படி இரு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகளை திறக்க அனுமதி அளித்ததை தொடர்ந்து மேற்படி இரு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் 05.01.2012ம் தேதி அன்று திறக்கப்பட்டதில் திரு. என். தங்கவேலு, கோவை ஒப்பந்ததாரர் மதிப்பீட்டிற்கு 21.47% அதிகமும் மற்றும் திரு ஏ. வெங்கடாசலம் கோவை அவர்கள் மதிப்பீட்டிற்கு 14.87% அதிகமும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். இதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் திரு ஏ. வெங்கடாசலம் அவர்களிடம் கடிதம் மூலம் விலை குறைத்து கேட்கப் பட்டது. அதன் பேரில் ஒப்பந்ததாரர் திரு ஏ. வெங்கடாசலம் அவர்கள் சில இணங்களுக்கு விலை குறைப்பு செய்ததின் பேரில் மதிப்பீட்டிற்கு 9.89% அதிகம் ஆகும். மேலும் மேற்படி ஒப்பந்ததாரரை மீண்டும் விலை குறைத்துக் கொடுக்க கடிதம் மூலம் கேட்கப்பட்டது. அதன் பேரில் மேலும் விலை குறைத்துக் கொடுத்ததின் பேரில் மதிப்பீட்டிற்கு 4.95 % அதிகம் கொடுத்துள்ளார். எனவே மேற்படி பணிக்கு மதிப்பீட்டிற்கு 4.95 % அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு ஏ. வெங்கடாசலம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மேலும் அரசாணையின் எண் G.o.Ms No.227 நாள் 23.11.2009ல் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) தெரிவித்துள்ளவாறு மேற்படி

பணிக்கு பயன் படுத்தப்படும் திரவத்தாரின் விலையானது பணி மேற்கொள்ளும் போதுள்ள சந்தை விலைகேற்ப வழங்கவும், அதற்குண்டாகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு இப்பணிக்கு உண்டான பட்டியல் தொகையை வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - அனுமதிக்கலாம். ந.க.எண் : 10778/2011/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 227 நாள் : 30.01.2012**

அலுவலகக்குறிப்புக்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 15

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – நகர்ப்புற சாலைஅபிவிருத்தி திட்டம் (TURIP)2011 – 2012ல் சிப்பம் III ன்கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக.

*******

அரசாணை G.O(Ms) எண் - 290, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (MA-III) நாள் 22.11.2010ல் அரசாணைப்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ.1453.05 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியும், இப்பணிகளை நான்கு சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரநகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடித எண் 23125/2011/E3 நாள் 20.09.2011 அன்று உத்திரவு வழங்கியுள்ளார்.

இதில், மூன்றாம் சிப்பம் பணிகளுக்கு ரூ.353.00 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள 28.12.2011 அன்று இரு உறைகள் முறையில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பித்தனர். அதன் விபரம் :

(1) திருமதி. எம். சரோஜினி , கோவை
(2) தி/ள். எம். சரவணா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் ,கோவை

பெறப்பட்ட இரு ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த தொழில்நுட்ப உறைகள் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவால் 28.12.2011 அன்று பரிசீலனை செய்யப்பட்டதில் திருமதி. எம். சரோஜினி, கோவை மற்றும் தி/ள். எம். சரவணா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் ,கோவை ஆகிய இரு ஒப்பந்தாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதை செய்து ஆணையருக்கு சமர்ப்பிக்கப் பட்டதில் ஆணையர் அவர்கள் 03.01.2012ம் தேதி உத்திரவில் மேற்படி இரு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகளை திறக்க அனுமதி அளித்தததை தொடர்ந்து மேற்படி இரு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் 05.01.2012ம் தேதி அன்று திறக்கப்பட்டதில் திருமதி. எம். சரோஜினி, கோவை ஒப்பந்ததாரர் மதிப்பீட்டிற்கு 26.67% அதிகமும் மற்றும் தி/ள். எம். சரவணா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் கோவை அவர்கள் மதிப்பீட்டிற்கு 12.74% அதிகமும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். இதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் தி/ள். எம். சரவணா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களிடம் கடிதம் மூலம் விலை குறைத்து கேட்கப் பட்டது. அதன் பேரில் ஒப்பந்ததாரர் தி/ள். எம். சரவணா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் சில இணங்களுக்கு விலை குறைப்பு செய்ததின் பேரில் மதிப்பீட்டிற்கு 10.49% அதிகம் ஆகும். மேலும் மேற்படி ஒப்பந்ததாரரை மீண்டும் விலை குறைத்துக் கொடுக்க கடிதம் மூலம் கேட்கப்பட்டது. அதன் பேரில் மேலும் விலை குறைத்துக் கொடுத்ததின் பேரில் மதிப்பீட்டிற்கு 4.95 % அதிகம் கொடுத்துள்ளார். எனவே மேற்படி பணிக்கு மதிப்பீட்டிற்கு 4.95 % அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் தி/ள். எம். சரவணா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும்

மேலும் அரசாணையின் எண் G.o.Ms No.227 நாள் 23.11.2009ல் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) தெரிவித்துள்ளவாறு மேற்படி பணிக்கு பயன் படுத்தப்படும் திரவத்தாரின் விலையானது பணி மேற்கொள்ளும் போதுள்ள சந்தை விலைகேற்ப வழங்கவும், அதற்குண்டாகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு இப்பணிக்கு உண்டான பட்டியல் தொகையை வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - அனுமதிக்கலாம் ந.க.எண் : 10779/2011/எம்.டி.3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 228 நாள் : 30.01.2012**

அலுவலகக்குறிப்புக்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 16

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – நகர்ப்புற சாலைஅபிவிருத்தி திட்டம் (TURIP)2011 – 2012ல் சிப்பம் IV ன்கீழ் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் – தொடர்பாக.

*******

அரசாணை G.O(Ms) எண் - 290, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (MA-III) நாள் **22.11.2010**ல் அரசாணைப்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூ.**1453.05** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியும், இப்பணிகளை நான்கு சிப்பங்களாக பிரித்து ஒப்பந்தப் புள்ளிகள் கோரநகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடித எண் 23125/2011/E3 நாள் **20.09.2011** அன்று உத்திரவு வழங்கியுள்ளார்.

இதில், நான்காம் சிப்பம் பணிகளுக்கு ரூ.**378.00** இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள **28.12.2011** அன்று இரு உறைகள் முறையில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப் புள்ளி சமர்ப்பித்தனர். அதன் விபரம் :

**(1)** திருமதி. எம். சரோஜினி , கோவை
**(2)** தி/ள். எம். சரவணா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் ,கோவை

பெறப்பட்ட இரு ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த தொழில்நுட்ப உறைகள் திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக் குழுவால் **28.12.2011** அன்று பரிசீலனை செய்யப்பட்டதில் திருமதி. எம். சரோஜினி, கோவை மற்றும் தி/ள். எம். சரவணா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் ,கோவை ஆகிய இரு ஒப்பந்தாரர்களும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதை செய்து ஆணையருக்கு சமர்ப்பிக்கப் பட்டதில் ஆணையர் அவர்கள் **03.01.2012**ம் தேதி உத்திரவில் மேற்படி இரு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறைகளை திறக்க அனுமதி அளித்ததை தொடர்ந்து மேற்படி இரு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளிகள் **05.01.2012**ம் தேதி அன்று திறக்கப்பட்டதில் திருமதி. எம். சரோஜினி, கோவை ஒப்பந்ததாரர் மதிப்பீட்டிற்கு **12.88%** அதிகமும் மற்றும் தி/ள். எம். சரவணா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் கோவை அவர்கள் மதிப்பீட்டிற்கு **15.20%** அதிகமும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர்.

இதனை தொடர்ந்து ஒப்பந்ததாரர் தி/ள். எம். சரவணா கண்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களிடம் கடிதம் மூலம் விலை குறைத்து கேட்கப் பட்டது. அதன் பேரில் ஒப்பந்ததாரர் திருமதி. எம். சரோஜினி அவர்கள் சில இணங்களுக்கு விலை குறைப்பு செய்ததின் பேரில் மதிப்பீட்டிற்கு **10.55%** அதிகம் ஆகும். மேலும் மேற்படி ஒப்பந்ததாரரை மீண்டும் விலை குறைத்துக் கொடுக்க கடிதம் மூலம் கேட்கப்பட்டது. அதன் பேரில் மேலும் விலை குறைத்துக் கொடுத்ததின் பேரில் மதிப்பீட்டிற்கு **4.95** % அதிகம் கொடுத்துள்ளார். எனவே மேற்படி பணிக்கு மதிப்பீட்டிற்கு **4.95** % அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திருமதி. எம். சரோஜினி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மேலும் அரசாணையின் எண் G.o.Ms No.227 நாள் **23.11.2009**ல் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) தெரிவித்துள்ளவாறு மேற்படி பணிக்கு பயன் படுத்தப்படும் திரவத்தாரின் விலையானது பணி மேற்கொள்ளும் போதுள்ள சந்தை விலைகேற்ப வழங்கவும், அதற்குண்டாகும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியில் மேற்கொண்டு இப்பணிக்கு உண்டான பட்டியல் தொகையை வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : - அனுமதிக்கலாம் ந.க.எண் : **10780/2011/எம்.டி.3**

### மாநகர மன்ற தீர்மானம் எண் 229 நாள் : 30.01.2012

அலுவலகக்குறிப்புக்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

## பொருள் எண் 17

கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் (விரிவாக்க பகுதிகள் நீங்கலாக) சிறுவாணி மற்றும் பில்லூர் IIவது குடிநீர் திட்டம் ஆகிய இரு குடிநீர் திட்டங்களிலிருந்து தினசரி கிடைக்கப்பெறவுள்ள 200 மில்லியன் லிட்டர் கொள்ளளவு குடிநீரினை கொண்டு, 24 மணி நேரமும் தங்கு தடையின்றி, சீரான குடிநீர் மாநகராட்சி பகுதி மக்களுக்கும் வழங்கும் பொருட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின்கீழ் 24x7 குடிநீர் விநியோக திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது, இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தொழில்நுட்ப கலந்தாலோசக நிறுவனமான திரு/ள். பிட்சனர் கன்சல்ட்டிங் இன்ஜினியர்ஸ் (இந்தியா) பிரைவேட். லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணியில் கூடுதல் மேல்நிலை தொட்டிகள் பிரதான மற்றும் விநியோக மெயின் குழாய்கள் புதியதாக பதித்தல், வீட்டிணைப்பு குழாய்கள் நவீன அளவுமானியுடன் பொருத்துதல், விநியோக தானியங்கி சுலிஸ் வால்வுகள் கணினி மூலம் செயல்படுத்துதல் பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 595.24 கோடி ஆகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்ட அறிக்கை குறித்தான விபரங்கள் மற்றும் விளக்கத்தினை வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு Power Point Presentation மூலம் கடந்த 18.01.2012 தேதியன்று, திட்ட அறிக்கையினை தயாரித்த கலந்தாலோசக நிறுவனத்தினரால் விரிவாக விளக்கப்பட்டது. இத்திட்டம் அண்டை மாநிலமான கர்நாடக மாநிலம் ஹுப்ளி, தார்பார் பெல்காம் மற்றும் குல்பர்கா போன்ற மாநகராட்சிகளில் கடந்த 3 வருடங்களாக செயல்படுத்தப்பட்டு நன்கு இயங்கி வருகிறதெனவும் தெரிவித்தனர். இவ்வாறு செயல்படுத்தி வரும் திட்டத்தினை நேரில் சென்று எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதை கண்டு ஆய்வு செய்து வரவேண்டும் என விளக்க கூட்டத்தில் கலந்துகொண்ட மாமன்ற உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தனர்.

எனவே, 24x7 குடிநீர் விநியோகத் திட்டத்தை கோயம்புத்தூர் மாநகரில் செயல்படுத்துவதற்கு முன் இத்திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வரும் கர்நாடக மாநில மாநகராட்சிகளுக்கு வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அதிகாரிகளுடன் நேரில் சென்று ஆய்வு செய்து வருவதற்கும், ஆய்விற்கு சென்று வருவதற்கான செலவினத்தினை மாநகராட்சி நிதியிலிருந்து செலவழிக்கவும் அதற்கான அனுமதியினை அரசிடமிருந்து பெறுவதற்கும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>

24x7 குடிநீர் விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநிலங்களுக்கு வணக்கத்திற்குரிய மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் சென்று ஆய்வு செய்து வரவும், அதற்கானசெலவினத்தினை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஆய்விற்கு சென்று வருவதற்கான அனுமதியினை அரசிடமிருந்து பெறவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 2896/08/ஜே. என். 5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 230 நாள் : 30.01.2012</u>**

அலுவலகக்குறிப்புக்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

**பொருள்:-** கோயம்புத்தூர் மாநகராட்சி - விளாங்குறிச்சி கிராம பஞ்சாயத்து, துடியலூர், வெள்ளக்கிணர், சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி, காளப்பட்டி பேரூராட்சிகளின் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் கட்ட JNNURM திட்டத்தின்கீழ் பணிகளை மேற்கொள்ளுதல் - தொடர்பாக

-----

மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்ட விளாங்குறிச்சி கிராம பஞ்சாயத்து, துடியலூர், வெள்ளக்கிணர், சரவணம்பட்டி, சின்னவேடம்பட்டி, காளப்பட்டி பேரூராட்சிகளின் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் கட்ட JNNURM திட்டத்தின்கீழ் இப்பணிகளை மேற்கொள்ள மனைப்பிரிவில் உள்ள பொது இடங்கள் மற்றும் பூங்கா இடங்களை தேர்வு செய்து முன்நுழைவு அனுமதி கேட்டு 21.01.2012 அன்று செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டப்படும் இடத்தின் விபரம் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ.எண் | மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமையவுள்ள பகுதி | கொள்ளவு லட்சம் | இடத்தின் பரப்பளவு (ச.மீ) | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | விளாங்குறிச்சி | 15.00 | 30 x 60 m | மருதம் நகர் மனைப்பிரிவில் உள்ள பூங்கா இடம் |
| 2. | துடியலூர் V.K.L நகர் | 3.00 | 25 x 25 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம் |
| 3. | சீனிவாச நகர் | 3.00 | 25 x 25 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம் |
| 4. | சுப்பிரமணியம் பாளையம் | 2.00 | 20 x 20 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம |
| 5. | மருதாசலம் தேவர் காலனி | 1.80 | 40 x 40 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம |
| 6. | அப்பநாயக்கன் பாளையம் | 2.25 | 25 x 25 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம |
| 7. | வெள்ளக்கிணர் பொன்விழா நகர் | 0.60 | 15 x 15 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம |
| 8. | அமர்ஜோதி சரோஜ் நகர் | 0.60 | 15 x 15 m | மேற்படி இடத்தில் கிணறு உள்ளது. இந்த இடத்திற்கு மாற்று இடமாக குடியிருப்பு சங்கத்தால் வேறு இடம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்ட இடம் வாங்கப்பட்டு பேரூராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்கலாம். |
| 9. | சரவணம்பட்டி பாலாஜி நகர் | 2.80 | 25 x 25 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம |
| 10. | கல்பனா நகர் | 2.90 | 25 x 25 m | சிவசக்தி மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம் |
| 11. | விஸ்வாசபுரம் | 2.80 | 25 x 25 m | ஏற்கனவே கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு அருகில் |
| 12. | துரைசாமி நகர் | 2.10 | 20 x 20 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம |
| 13. | CP கந்தசாமி நகர் | 0.50 | 15 x 15 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம் |
| 14. | அபிராமி நகர் | 2.00 | 20 x 20 m | கிருஷ்ணா அவென்யூ மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம். |
| 15. | சிவானந்தபுரம் | 0.50 | 15 x 15 m | ஏற்கனவே கட்டப்பட்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு அருகில் உள்ள இடம் |
| 16. | சின்னவேடம்பட்டி சக்தி நகர் | 1.90 | 20 x 20 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம் |
| 17. | சுப்பநாயக்கன்புதூர் | 1.00 | 20 x 20 m | மேற்படி இடம் அரசு புறம்போக்கு இடமாக உள்ளது. |
| 18. | காந்திநகர் | 0.60 | 15 x 15 m | மேற்படி இடம் அரசு புறம்போக்கு இடமாக உள்ளது. |
| 19. | ரேணுகா நகர் | 0.60 | 15 x 15 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 20. | காளப்பட்டி<br>கோவை திருநகர் | 3.60 | 30 x 30 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம் |
| 21. | திருமுருகன் நகர் | 2.70 | 25 x 25 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம் |
| 22. | வசந்தம் நகர் | 1.30 | 20 x 20 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம் |
| 23. | G.K.R நகர் | 2.30 | 20 x 20 m | மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடம் |

வரிசை எண்.8-ல் உள்ள இடத்தில் கிணறு உள்ளதால் அப்பகுதி குடியிருப்போர் நல சங்கம் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க மாற்று இடம் பேரூராட்சிக்கு ஒப்படைத்துள்ளனர். இந்த இடத்தில் நீர்தேக்க தொட்டி கட்டலாம்.

வரிசை எண்.17, 18-ல் குறிப்பிட்டுள்ள இடம் அரசு புறம்போக்கு இடமாக உள்ளதால் மாவட்ட ஆட்சித்தலைவரின் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுக்கலாம்.

மீதம் உள்ள 20 இடங்கள் மனைப்பிரிவில் உள்ள பொது ஒதுக்கீட்டு இடமாக காலியாக உள்ளதால் இந்த இடத்தில் குடிநீர் தொட்டி கட்டியபின்னர் கட்டிடம் மற்றும் இடத்துடன் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கட்டுமானப்பணி மேற்கொள்ள முன்நுழைவு அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.676/12/MH5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 231 நாள் : 30.01.2012</u>**

பொருளில் கண்டுள்ள 23 இடங்களில் கட்டப்படவுள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், அப்பகுதிகளிலுள்ள மக்களின் குடிநீர் தேவைக்கு ஏற்றவாறு கொள்ளளவு கொண்டவைகளாக கட்டப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, மேற்படி இடங்களில் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் கட்டத் தொடங்குவதற்கு முன்பாக, கோயம்புத்தூர் மாநகராட்சி நிர்வாகத்தை கலந்து ஆலோசித்த பின்னரே இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் அலுவலகக்குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம.வேலுசாமி**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**